வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05 08.02.2024 வியாழக்கிழமை இதழ் : 39 பக்கங்கள் : 12




# 4,983 பாடசாலைகளின் மாணவர் மத்தியில் போதைப் பாவனை!

கொழும்பு, பெப்ரவரி 08

**நாட்டில் 4 ஆயிரத்து 983 பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களிடையே போதைப் பொருள் பாவனை உள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

மாணவரிடையேயான போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்த பாடசாலை நிர்வாகம் மற்றும் மாணவர்களின் பெற்றோர்களை உள்ளடக்கி 5 ஆயிரத்து 133 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பதில் பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டுதலுக்கு அமையவே இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் 10 ஆயிரத்து 221 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளிலேயே 4 ஆயிரத்து 983 பாடசாலைகளில் மாணவர்கள் போதைப்

11

# தன்னிச்சை செயல்பாட்டில் அரசாங்கம்; ஐக்கிய மக்கள் சக்தி இனி ஆதரிக்காது!

## லக்ஷ்மன் கிரியெல்ல அறிவிப்பு



கொழும்பு, பெப். 08

அண்மைக்காலத்தில் அரசாங்கம் தன்னிச்சையாகச் செயல்பட்டதால் ஜனாதிபதியின் கோரிக்கைகளுக்கு மத்தியிலும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்காது என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் கைகோக்குமாறு ஜனாதிபதி எதிர்க்கட்சிகளிடம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்ற போதிலும் அரசாங்கம் எதிர்க்கட்சிகள் தொடர்பில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை என்று நேற்று பாராளுமன்ற வளாகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமைதியான போராட்டத்தின்மீது அரசாங்கம் தாக்குதல் நடத்தியதாகவும் பலவந்தமாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவைப் பெற முயற்சிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கிரியெல்ல தெரிவித்தார்.

"நாங்கள் அரசாங்கத்துக்கு தொடர்ந்து ஆதரவளித்தோம். 21 ஆவது திருத்தம் போன்ற பல சட்டங்களை நிறை வேற்றுவதற்கு நாங்கள் ஆதரவளித்தோம். எனினும், அரசாங்கம் அண்மைக்

11

# நிஷாந்தவின் மரணத்தில் சந்தேகம் நிலவுகின்றது!

## மனைவி முறைப்பாடு

கொழும்பு, பெப். 08

எனது கணவரின் மரணத்தில் சந்தேகம் உள்ளது. இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் - இவ்வாறு குறிப்பிட்டு குற்றப் புலனாய்வு பிரிவிடம் முறைப்பாடு செய்துள்ளார் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவி சாமரி பிரியங்க.

தனது கணவரின் மரணத்தின் சூழ்நிலையில் சந்தேகம் இருக்கிறது என்று அந்த முறைப்பாட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த கடந்த

11

# பொருளாதாரத்தைப் பலப்படுத்த மாகாண சபைகளுக்கு அதிகாரம்!

## கொள்கைப் பிரகடனத்தில் ஜனாதிபதி

- பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வுகள் இல்லை
- நாட்டின் நலனுக்காக ஒன்றிணைய சகலருக்கும் அழைப்பு
- யாழ்., திருமலை பொருளாதார நகரங்களாக விரிவுபெறும்



கொழும்பு, பெப். 08

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்கள் உரிய வகையில் வழங்கப்படும் என்று கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றைய தினம் தனது கொள்கைப் பிரகடன உரையில் தெரிவித்தார்.

அத்துடன், பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வுகள் இல்லை. பொருளாதார ரீதியான தீர்வே உள்ளது. அறிவியல் தீர்வை தேட வேண்டும். அதனை விடுத்து சில அரசியல் குழுக்கள்

11

## தமிழ் அரசு பொதுச் செயலர் விவகாரம்

# பதவிக் காலத்தை பகிர இணங்கியமை உண்மை!

மட்டக்களப்பு, பெப். 08

தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக் காலத்தை தலா ஒரு வருடம் பகிர்வதற்கு இணங்கியமை உண்மை என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டு. ஊடக அமையத்தில் செய்தியாளர் சந்திப்பை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் நடத்தினார். இதன்போது,

11



# சுயநிர்ணய அடிப்படையில் தமிழருக்கான தீர்வு அவசியம்!

## அமெரிக்க அரசை வலியுறுத்துமாறு அந்நாட்டு எம். பிக்களிடம் கோரிக்கை

வாஷிங்டன், பெப். 08

இலங்கை அரசை மாற்றியமைத்து இனப் பிரச்னைக்கு - தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையிலே தீர்வை பெற்றுக்கொடுக்க அமெரிக்க அரசாங்கத்தை வலியுறுத்தவேண்டும் - இவ்வாறு தான் சந்தித்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள்

11

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை!

## பீரிஸ் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப். 08

சுதந்திரமான முறையில் தேர்தல் இடம்பெறுவதை தடுக்கும் வகையில் பாரதூரமான சட்டங்களை இயற்ற அரசாங்கம் முறையற்ற வகையில் செயல்படுகிறது. சகல எதிர்க்கட்சிகளுடனும் கலந்துரையாடி சபாநாயகருக்கு எதிராக வெகுவிரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவோம்

11

# ஜனாதிபதியின் ஆசியுடனேயே அநுரகுமார இந்தியா பயணம்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, பெப். 08

ஜனாதிபதியின் முழுமையான ஆசீர்வாதத்துடன் தான் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க இந்தியாவுக்கு சென்றுள்ளார். அவர்கள் அரசுமுறை பயணமாகவே சென்றுள்ளனர் - என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

11

# பயஸின் உண்ணாவிரத போராட்டம் நிறைவு!

திருச்சி, பெப். 08

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் 7 நாட்களாக றொபேர்ட் பயஸ் முன்னெடுத்த உண்ணாவிரத போராட்டம் அதிகாரிகளின் வாக்குறுதிக்கமைய நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்ட றொபேர்ட்

11

# இப்படியும் நடக்கிறது

கனடாவிலிருந்து நண்பர் ஒருவர் ஒரு காணொலி ஒன்றை அனுப்பியிருந்தார். அதனைப் பார்க்காமல் இருக்கமுடியவில்லை. ஏதேனும் முக்கியமாக இருந்தால் மாத்திரமே என்னோடு விடயங்களை பகிர்பவர் அவர். அதனால் அதனைப் பார்க்கத் தொடங்கியபோதுதான் அது கனடிய தமிழ் காங்கிரஸ் அமைப்பினர் நடத்திய ஊடக சந்திப்பு என்பது புரிந்தது.

அண்மைக்காலமாக அந்த அமைப்புக்கு எதிராக தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்க ளின் சங்கமும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றது.

கனடாவிலும் பலரும் அந்த அமைப்புக்கு எதிராகக் குரல் எழுப்பி வருகின்றனர். அண்மையில் அவர்களின் அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடைபெற்றிருந்தது.

இவை எல்லாம் எதனால் நடைபெறுகின்றது? ஒரு காலத்தில் கனடா தமிழர்களின் அடையாளமாக விளங்கிய இந்த அமைப்பு, அண்மையில் இது போன்ற கண்டனங்களுக்கு உள்ளாகிவருவது எதனால் என்பது பலருக்கும் தெரிந்ததுதான்.

சி. ரி. சி. என்று நன்கு அறியப்பட்ட இந்த கனடிய தமிழ் காங்கிரஸ் நீண்டகாலமாகவே தாயகத்தில் ஓர் அரசியல்வாதியுடன் நெருக்கமாகவே செயல்பட்டு வருவது ஒன்றும் இரகசியமானது அல்ல.

இந்த நிலையில் அண்மையில் உலகத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் செய்யப்பட்ட 'இமாலய பிரகடனம்' இப்போது கனடிய தமிழ் காங்கிரஸுக்குள்ளும் சர்ச்சையை உருவாக்கியிருக்கின்றது.

உலகத் தமிழர் பேரவை என்பது கனடிய தமிழ் காங்கிரசையும் சேர்த்த ஒரு நிறுவனமே தவிர அது ஒரு தனிப்பட்ட அமைப்பு அல்ல. உலகத் தமிழர் பேரவையில் ஓர் அங்கமாக இருக்கும் பிரித்தானிய தமிழர் பேரவையின் சுரேன் சுரேந்திரனே இன்று அந்த அமைப்பை முழுக்கமுழுக்க இயக்குகின்றார் என்பதும் தெரிந்ததுதான்.

அவர்களின் இந்த 'இமாலய பிரகடனம்' குறித்து ஏற்கனவே இந்தப் பத்தியில் பல தடவைகள் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியாகிவிட்டது. போர்க்குற்றம் குறித்தும் பொறுப்புக்கூறல் குறித்தும், நாடு தழுவிய பிரசாரத்தை மாவட்டம் தோறும் தொடங்கப்போவதாக அறிவித்திருந்தார்கள். ஜனவரியிலிருந்து இந்தக் கலந்துரையாடல் தெற்கில் அவர்களின் பௌத்த பிக்குகளால் தொடங்கப்படும் என்று தெரிவித்திருந்த போதிலும் அப்படி எந்தவொரு கலந்துரையாடலும் இன்று பெப்ரவரி மத்தியை நெருங்கும் இவ்வேளையிலும் தொடங்கியதாக எங்கும் நாம் அறியவில்லை.

அதுவல்ல இன்று இங்கே பேசப்படவேண்டியது. சி. ரி. சியின் ஊடக சந்திப்பில் அவர்களின் சார்பில் கலந்துகொண்டவர்கள், தெரிவித்த சில விடயங்களே எமது கவனத்தைப் பெற்றிருக்கின்றன.

இமாலய பிரகடனம் என்பது உலகத் தமிழர் பேரவை முன்னெடுத்த முயற்சி என்றும் அதற்கு தமது அமைப்பும் ஆதரவு வழங்கியதாகவும் அந்த ஊடக சந்திப்பில் விளக்கமளிக்கப்பட்டது. இதன்மூலம் அவர்கள் சொல்ல வருவது, உலகத் தமிழர் பேரவையில் தமது அமைப்பு ஓர் அங்கம் இல்லை என்பதையா? அல்லது அவர்கள் செய்கின்ற எதனையும் நாங்கள் கேள்விக்கு உட்படுத்தாமல் ஆதரிப்போம் என்பதையா என்று தெரியவில்லை.

இந்தப் பிரகடனத்தை இலங்கையில் விற்பதற்கான 'மார்க்கெற்றிங்' செய்வதற்காக வந்திருந்தவர்களில் ஒருவர், கனடிய தமிழ் காங்கிரசை சேர்ந்தவர். ஆனால், அந்தப் பிரகடனம் குறித்து தமது அமைப்புக்குள் எந்த கலந்துரையாடல்களும் நடக்கவில்லை என்பதையும் அந்த ஊடக மாநாட்டில் உறுதி செய்தார்கள்.

ஆக, நமது அரசியல் கட்சிகள் மாத்திரமல்ல, இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் இயங்குகின்ற முக்கிய அமைப்புகள்கூட எப்படி இயங்குகின்றன என்பதற்கு இதைவிட விளக்கம் தேவையில்லை.

இவையெல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தது கனடிய தமிழ் காங்கிரஸ் இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான் என்று மனதார ஏற்றுக்கொண்டாலும் தாங்கள் பொதுவெளியிலோ அல்லது சர்வதேச இராஜதந்திரிகளுடனோ 'இனப் படுகொலை' என்ற வார்த்தையை பயன்படுத்துவதில்லையாம். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் சொல்லப்பட்டதுபோல, போர்க் குற்றங்கள் என்ற வார்த்தையைத்தான் பயன்படுத்துவார்களாம்.

இதனை கேட்டபோது இங்கு தாயகத்திலும் ஒருவர், 'இனப் படுகொலை நடைபெற்றது என்பதை நிறுவுவதற்கு நம்மிடம் ஆதாரம் இல்லை' என்று நல்லாட்சி காலத்தில் வியாக்கியானம் சொன்னதுதான் ஞாபகத்துக்கு வந்தது. அவர்தான் இலங்கையில் இருந்து இதைச் சொன்னார் என்றால், கனடா மண்ணிலிருந்து சொல்வதற்கு இவர்கள் ஏன் யோசிக்கிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. கனடாவில் ஒன்ராறியோ மாகாண அரசு 'இனப்படுகொலை கல்வி வாரத்தை' சட்டமாக்கி வைத்திருக்கின்ற போது, இவர்கள் இப்படிச் சொல்ல முடியவில்லை என்று விளக்கமளிக்கின்றனர்.

தாயகத்தில் உள்ள மக்கள் இப்போது இங்குள்ள தலைவர்கள் மீது நம்பிக்கையிழந்து புலம்பெயர் தமிழர்கள் ஏதாவது செய்வார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த நம்பிக்கையும் விரைவில் தகர்ந்துபோகும் என்பதையே இந்த சம்பவங்கள் உணர்த்துகின்றன.

**- ஊர்க்குருவி.**



அண்மையில் கொழும்பு எஸ்பின்ரன் அரங்கில் நடந்த 'பிரதீபா' தேசிய விருது வழங்கல் விழாவில் சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையம் அனைத்து கலாசார மத்திய நிலையங்களுக்குமான சமத்துவ அதிவிசேட விருதான 'அதி சூரா' விருதைப் பெற்றுக் கொண்ட தருணம்...!

# மோடியின் சொந்த மாநிலத்துக்கு சென்றனர் அநுரகுமார குழுவினர்!

புதுடில்லி, பெப். 08

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி குழுவினர் இந்தியப் பயணத்தின் இரண்டாவது நாள் சந்திப்புகளை முடித்துக் கொண்டு நேற்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தை நோக்கிச் சென்றனர்.

இந்தத் தூதுக்குழு குஜராத்தி முதல்வர் புபேந்திர பட்டேலை சந்தித்து மாநிலத் தில் சில சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குஜராத்தில் ஒரு காலத்தில் முதல்வராக இருந்த நரேந்திர மோடியின் அரசியலே பின்னர் இந்தியாவின் உயர்பதவிக்கு அவரை உயர்த்தியது.

இந்தநிலையில் அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தூதுக்குழு நேற்று இந்தியாவின் முன்னணி சிந்தனைக் குழுவான 'ஒப்சேர்வர் ரிசேர்ச் பௌண்டேசன்' பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியது.

அத்துடன், குழுவினர் இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தை பார்வையிட்டனர். முன்னதாக, இந்தப் பயணத்தின் போது, இந்திய வெளியுறவு துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், வெளியுறவு செயலர் வினய் மோகன் ஆகியோருடன் பேச்சு இந்த குழுவினர் பேச்சு நடத்தினர்.

இதேவேளை, தூதுக்குழுவினர் கம்யூனிஸ்ட் கட்சியால் ஆளப்படும் இந்திய மாநிலமான கேரளாவுக்கு செல்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யோகக் கலை கற்கைநெறி!

யாழ்ப்பாணம், பெப். 08

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக யோகக்கலை அடிப்படை கற்கைநெறியை நடத்துகிறது.

இதன், புதிய பிரிவு நல்லூர் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும், அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணி முதல் காலை 8.00 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படை கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (ஐ)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் 'எக்கோ' மருத்துவ நிபுணர் இல்லை

## நோயாளர்கள் பெரும் அவதி

கிளிநொச்சி, பெப். 08

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் எக்கோ வைத்திய நிபுணருக்கு வெற்றிடம் காணப்படுவதால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நோயாளர்கள் எக்கோ பரிசோதனையை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் அல்லது வவுனியா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

# தேசிய மக்கள் சக்திக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல்

கொழும்பு, பெப். 08

தேர்தல்கள் ஆணைக்குழுவால் தேசிய மக்கள் சக்தியை பதிவு செய்துள்ள முறைமை சட்டவிரோதமானது எனவும் இது தொடர்பில் சமர்ப்பணங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்குமாறும் கோரி உயர்நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வினிவித பெரமுனவின் செயலாளர் சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்குவால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வினிவித பெரமுனவை அரசியல் கட்சியாக பதிவு செய்வதை நிராகரித்துத் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்ட தீர்மானத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிப் பேராணை மனு மீதான விசாரணையின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்துள்ள, வினிவித பெரமுனவின் செயலாளர் சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்கு, ஜே. வி. பியின் பிரிவு ஒன்றான தேசிய மக்கள் சக்தியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்துள்ளமை சட்டத்திற்கு முரணானது என தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 103இன் இரண்டாம் இலக்க சரத்துக்கு அமைய, ஒரே கட்சியின் வெவ்வேறு பிரிவுகளை அரசியல் கட்சிகளாக பதிவு செய்கின்றமை சட்டவிரோதமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu
08.02.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், தை 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல் வாக்காக திரட்சிபெறுவது என்றால் என்ன?

ஜே. வி. பியின் இந்திய பயணம் ஜனாதிபதி தேர்தலில் எவர் வெல்லப் போகின்றார் என்னும் கேள்வியை எழுப்பியிருக்கின்றது - ஏனெனில், விடயங்கள் அந்தளவுக்கு சிக்கலானவையாக இருக்கின்றன. தென்னிலங்கை அரசியலில் எவர் எவரோடு நிற்பது தொடர்பான ஒட்டுதல்களும் - வெட்டுதல்களும் தீவிரமடைந்திருக்கின்றன. இதனை நோக்கும்போது ஒரு விடயம் தெளிவாகின்றது - அதாவது, ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது சஜித் பிரேமதாஸவோ இலகுவாக வெற்றிபெற முடியாது.

ரணிலைப் பொறுத்தவரையில் அவர் என்னதான் பொருளாதார மீட்சியில் தனது பங்களிப்புத் தொடர்பில் பேசினாலும்கூட அவரால் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியவில்லை என்பதையே கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. இவ்வாறான கருத்துக் கணிப்புகள் தொடர்பில் சந்தேகங்கள் இருந்தாலும்கூட ஜே. வி. பியின் இந்திய பயணம். அவர்கள் தொடர்பான கருத்துக் கணிப்புகளில் கணிசமான உண்மை இருக்கின்றது என்பதையே கூறுகின்றது.

ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க, ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்போது - நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் ஓரணியாக நிற்கவேண்டியது அவசியம் - ஏனெனில், இவர்களின் வெற்றியில் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களின் வாக்குகளே தீர்மானகரமான பங்கை ஆற்றப் போகின்றன. ஆனால், ஜே. வி. பியின் வெற்றியில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகள் பெரியளவில் தாக்கம் செலுத்தாது. இதற்கு அவர்கள் தொடர்பான அபிப்பிராயங்களே காரணமாகும். முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்களின் வாக்குகள் ரணிலும் சஜித் பிரேமதாஸவும் ஓரணியாக நின்றால் அவர்களை நோக்கியே சாயும். முஸ்லிம்களுக்கு வேறு தெரிவுகள் நிச்சயமாக இருக்கப் போவதில்லை. ஏனெனில், அவர்களின் ஒரே இலக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிப்பது மட்டும்தான்.

இந்த இடத்தில் தமிழ் மக்கள் மட்டுமே தனியான அரசியல் வாக்குகளாக மாறும் வல்லமையை கொண்டிருக்கின்றனர். தமிழ் மக்களின் வாக்குகள் அரசியல் வாக்குகளாக திரளும்போது அவர்களின் ஆதரவு இருப்பவர்களே வெற்றியை பெறுவது நிச்சயமான ஒன்றாக இருக்கும். கோட்டாபய ராஜபக்ஷவின் இடத்தை ரணிலோ அல்லது சஜித் பிரேமதாஸவோ நினைத்தும் பார்க்க முடியாது. அது கோட்டாபயவுடன் முடிந்துவிட்டது. தற்போதைய சூழலில் அவ்வாறானதோர் எழுச்சியை ஏற்படுத்த வல்ல சிங்கள தலைவர்கள் எவருமே தென்னிலங்கையில் இல்லை.

இந்த நிலையில், வடக்கு - கிழக்கை தாயகமாகக் கொண்டு வாழும் தமிழ் மக்களின் வாக்குகள் அரசியல் வாக்குகளாக திரட்சிபெறுமாயின் தமிழர்களை நோக்கியே தென்னிலங்கை திரும்ப வேண்டிவரும். ஆனால், தமிழ் மக்களின் வாக்குகள் அரசியல் வாக்குகளாக திரட்சிபெறாது என்றே தென்னிலங்கையிலுள்ள அனைவரும் நம்புகின்றனர். ஏனெனில், அந்தளவுக்கு தமிழ்த் தேசியம் பேசும் தலைவர்கள் என்போர் வல்லமையுள்ளவர்கள் அல்லர் - அவர்களால் ஓரணியாக இந்த விடயத்தில் செயலாற்ற முடியாது என்பதே அவர்களின் உறுதியான நம்பிக்கையாகும். ஏனெனில், அவர்களின் பார்வையில் தமிழ் மக்கள் யுத்தத்தை வெற்றிகொள்வதற்குத் தலைமை தாங்கிய இராணுவத் தளபதிக்கே வாக்களித்த மக்கள் - அந்தளவுக்கு உணர்வு இல்லாத மக்கள் - அவர்களுக்குத் தலைமை தாங்கும் தலைவர்களும் தென்னிலங்கையுடனான தங்களின் உறவுகள் பாதிக்கும் வகையில் முடிவுகளை மேற்கொள்ள மாட்டார்கள் என்றவாறான சிந்தனையே தென்னிலங்கையில் இருக்கின்றது.

இதனை எவ்வாறு மாற்றியமைப்பது? மாற்றியமைக்க முடியுமா? இந்த ஜனாதிபதித் தேர்தல்தான் தமிழ் மக்களுக்கு கிடைத்திருக்கும் இறுதி சந்தர்ப்பம்.

தமிழ் மக்களின் வாக்குகள் அரசியல் வாக்குகளாகத் திரட்சிபெறுவது என்றால் என்ன? ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு அனைத்து மக்களும் வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களின் வாக்குகளுக்கு அரசியல் பெறுமதி ஒன்றை உருவாக்க முடியும். ஓர் இனத்தின் வாக்குகள் அரசியல் வாக்குகளாக மாற்றம் பெறுவது என்பது இந்த அடிப்படையில்தான். இந்தத் தகுதியை கொண்டிருக்கும் மக்கள் கூட்டம் இலங்கைத் தீவில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மட்டும்தான். ஆனால், இதனை நிரூபிப்பதற்கு ஓர் இனம் சரியான அரசியல் தலைமை பெற்றிருக்க வேண்டும்.

டெங்கு பரவும் சூழல்:

## கொக்குவிலை சேர்ந்த 7 பேருக்கு தலா 20ஆயிரம் ரூபாய் அபராதம்!

*யாழ்ப்பாணம், பெப். 08*

*டெங்கு பரவும் விதத்தில் சுற்றுச் சூழலை வைத்திருந்த 7 பேருக்கு தலா 20ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்துள்ளது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்.*

*நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட கொக்குவில் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் அண்மைக்காலமாக அதிகளவில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.*

*இதனையடுத்து, கொக்குவில் பொது சுகாதார பரிசோதகரால் தொடர்ச்சியான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் சுற்றாடலை நுளம்பு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. எனினும், அறிவுறுத்தல்களை பின்பற்றாது நுளம்பு பெருகும் சுற்றாடலை வைத்திருந்த 7 பேர் சோதனையின்போது சிக்கினர்.*

*இவர்களுக்கு எதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் தனித்தனியே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அவர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டமையை அடுத்து 7 பேருக்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து நேற்று நீதிவான் தீர்ப்பளித்தார். (ஐ)*

## கிளிநொச்சியில் கடந்த வருடம் 423 வர்த்தகர்கள்மீது நடவடிக்கை

*கிளிநொச்சி, பெப். 08*

*கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடத்தில் 423 வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ச. நிலாந்தன் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக அவர் குறிப்பிடுகையில்,*

*கடந்த வருடம் 2023 ஜனவரி முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சாதாரண நடவடிக்கைளின் போதும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் 423 வியாபார நிறுவனங்களின் மற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.*

*காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டு விலைகளை விட அதிகூடிய விலைகளிலேயே பொருட்களை விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, பொருட்களின் விலைகளில் மாற்றங்களைச் செய்து விற்பனை செய்தமை, அனுமதிக்கப்படாத முகப்பூச்சு கிறீம்களை விற்பனை செய்தமை, விற்பனைக்காகக் காட்சிப்படுத்தியமை, எடை குறைந்த பாண் விற்பனை செய்தமைக்காக காட்சிப்படுத்தியமை, முத்திரையிடப்படாத இலத்திரனியல் பொருட்களை விற்பனை செய்தமை என பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் 423 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இவ்வாறு கடந்த வருடத்தில் நிலுவையாக இருந்த வழக்குகள் உட்பட 433 வழக்குகளுக்குச் சட்ட நடவடிக்கைகளின் பின்னர் ரூபா 35 இலட்சத்து 23 ஆயிரம் நீதிமன்றால் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.*

*பாவனையாளர்கள் பொது மக்கள் இது தொடர்பான முறைப்பாடுகளை தங்களுக்கு நேரடியாகவோ அல்லது 1977 என்ற இலக்கத்தின் ஊடாகவோ முறைப்பாடுகளை செய்யலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.*

## படகில் கசிந்த விஷவாயுவால் ஒருவர் மரணம்; எழுவர் பாதிப்பு

*கொழும்பு, பெப். 08*


*மீன்பிடி படகின் மீன் சேகரிப்பு தொட்டிக்குள் உருவானதாகக் கூறப்படும் விஷ வாயுவை சுவாசித்ததில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.*

*காலி - அம்பலாங்கொடை மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*விஷ வாயுவால் 8 மீனவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்தார். ஏனைய 7 மீனவர்களும் பலப்பிட்டி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

*(ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பெப்ரவரி - 08 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - தை 24
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மரியாதை கூடும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். வேலைச்சுமை அதிகமாகும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**மிதுனம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். சக ஊழியர்கள் நெருக்கம் காட்டுவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். அலைக்கழிக்கப்படுவீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பாராட்டுவார்கள். மனோபலம் அதிகரிக்கும் நாள்.

**மீனம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். அவர்கள். உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

# இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கு தமிழக அரசு நடவடிக்கை

## அமைச்சர் மஸ்தான் தெரிவிப்பு

**சென்னை, பெப். 08**

**தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவது குறித்து தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முதல்கட்டமாக இலங்கையில் இருந்து முதலில் தமிழகம் வந்த200 பேரின் பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது - என்று சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.**

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகேயுள்ள தேக்காட்டூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் ரூ.3.56 கோடியில் கட்டப்பட்ட 58 வீடுகள் கொண்ட குடியிருப்பு திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியவை வருமாறு,

தமிழகத்தில் உள்ள முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு 2 கட்டங்களாக வீடுகள் கட்ட ரூ.400 கோடி நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் முடிவடைந்த இடங்களில், பயனாளிகளுக்கு வீடுகள் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவது குறித்து தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முதல்கட்டமாக இலங்கையில் இருந்து முதலில் தமிழகம் வந்த200 பேரின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக சட்டக் குழுவும் அமைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அவர்களுக்கு விரைவில் குடியுரிமை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் மாணவர்கள், உயர் கல்வி பயில தமிழக அரசு அனுமதி அளிக்கிறது. ஆனால், மருத்துவக் கல்லூரியில் சேர்வதில் மட்டும் சட்ட சிக்கல் உள்ளது. நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறும்போது, இலங்கைத் தமிழர்கள் உட்பட ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் விடிவு ஏற்படும் - என்றார். (ஐ)

# "கதவு திறந்தே இருக்கிறது"

## அமித் ஷா கருத்துக்கு தமிழக அரசியல் கட்சிகள் எதிர்வினை

*சென்னை, பெப். 08*

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அளித்த ஊடகப் பேட்டி ஒன்றில், "தமிழ்நாட்டில் தேர்தல் கூட்டணி தொடர்பான ஆலோசனைகளை நடைபெற்று வருகின்றன. கூட்டணி கதவு திறந்தே இருக்கிறது. தமிழ்நாடு ஒரு முக்கியமான மாநிலம். தேர்தல் அறிக்கையில் தமிழகம் சார்ந்த நிறைய அறிவிப்புகள் இருக்கும்" எனக் கூறியுள்ளார்.

அமைச்சர் அமித் ஷாவின் இந்தக் கருத்து தமிழக அரசியல் களத்தில் கவனம் பெற்றுள்ளது. அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி இன்னும் பட்டுப்போய் விடவில்லை என்பதை உணர்த்துவதாக இருப்பதாக கருத்துகள் எழத் தொடங்கியுள்ளன.

அமைச்சர் அமித் ஷாவின் இந்தக் கருத்து குறித்து மூத்த அரசியல்வாதியான ஓ.பன்னீர் செல்வம் கூறுகையில்,

"தேர்தல் கூட்டணி கதவு இன்னும் திறந்தே இருக்கிறது என உள்துறை அமைச்சர் அமித் ஷா சொல்லியிருப்பது அவருடைய நல்ல மனதைக் காட்டுகிறது. பா. ஜ. கவுடனான தொகுதிப் பங்கீடு பேச்சு சுமுகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது தொடர்பாக விரைவில் அறிவிப்பேன்" என்றார்.

தேர்தலில் ஓ. பி. எஸ். தரப்பு, பாஜக, டி. டி. வி. தினகரன், சசிகலா இணைந்து ஓரணியில் போட்டியிடலாம் என்ற பார்வைகளும் நிலவுகின்றன.

தி. மு. க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி

"அ. தி. மு. கவுக்காக கூட்டணி கதவு திறந்தே இருக்கிறது என்று அமித் ஷா சொல்லியிருப்பதன் மூலம் பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது. அதேபோல் அ. தி. மு. க. - பா. ம. கவுடன் தொகுதிப் பங்கீட்டு பேச்சுகளை மேற்கொண்டதன் மூலம் தமிழகத்தில் அக்கட்சி பலவீனமடைந்திருப்பது அம்பலமாகியிருக்கிறது. திமுகவின் பலமான கூட்டணியை எதிர்த்துப் போட்டியிட இங்கே யாருமில்லை" என்றார்.

முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார், "பா. ஜ. கவுடன் கூட்டணி வேண்டாம் என்பது அ. தி. மு. க. தொண்டர்கள் மற்றும் தமிழக மக்களின் முடிவு. பா. ஜ. கவுக்கான கதவு சாத்தப் பட்டுவிட்டது. முன்வைத்த காலை பின்வைக்கப் போவதில்லை" என்றார்.

இந்நிலையில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "அமித் ஷா தெரிவித்த கருத்துகளை இன்னும் நான் பார்க்கவில்லை. பார்த்தால் சொல்கிறேன்" என்று கூறியுள்ளார். (ஐ)

# விஜயின் அரசியல் பிரவேசம் முதல்வர் ஸ்டாலின் வரவேற்பு

*சென்னை, பெப். 08*

'மக்களுக்குத் தொண்டாற்ற யார் வந்தாலும் நான் மகிழ்ச்சி அடைவேன்' என்று நடிகர் விஜயின் அரசியல் பிரவேசம் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார் முதல்வர் ஸ்டாலின்.

நடிகர் விஜய், 'தமிழக வெற்றி கழகம்' என்ற கட்சியைத் தொடங்கி, அதைத் தேர்தல் ஆணையத்தில் பதிவும் செய்திருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.




இந்தநிலையில், ஸ்பெயினில் அரசு பயணத்தை முடித்து விட்டு நேற்று முன்தினம் சென்னை திரும்பினார் முதல்வர் ஸ்டாலின் . அங்கு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் பேசுகையில், நடிகர் விஜய் தொடங்கியுள்ள அரசியல் கட்சி தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு, 'மக்களுக்கு தொண்டாற்ற யார் வந்தாலும் வரவேற்பேன்' எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# தப்பியோடிய டிப்பரை சுட்டுப்பிடித்த பொலிஸ்

## மூன்று பேர் கைதாகினர்





யாழ்ப்பாணம், பெப். 08

**புத்தூர் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

நேற்று காலை பளையிலிருந்து சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றி வந்த டிப்பர் ரக வாகனம் புத்தூர் பகுதியில் வைத்து பொலிஸாரால் இடைமறிக்கப்பட்டது.

வாகனம் மறிக்கப்பட்ட போது பொலிசாரை உதாசீனம் செய்த சாரதி வேகமாக சென்று புத்தூர் பிரதான வீதி ஊடாக சிறுப்பிட்டி, ஆவரங்கால் உள்ளிட்ட பல பாதையில் ஊடாக சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக வேகமாக தப்பிச் சென்றுள்ளார்.

வாகனத்தை பின்தொடர்ந்து துரத்தி வந்த பொலிசார் பாடசாலை மாணவர்கள் பயணித்துக் கொண்டிருந்த புத்தூர் பிரதான வீதியை அடுத்து மக்கள் நடமாட்டம் குறைந்த வீரவாணி எனும் பகுதியில் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு குறித்த டிப்பர் ரக வாகனத்தை தடம்புரளச் செய்துள்ளனர்.

துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்கான டிப்பர் ரக வாகனத்தின் டீசல் மற்றும் டயர் மீது துப்பாக்கி சன்னங்கள் பாய்ந்ததில் சாரதி உட்பட இருவர் வாகனத்துடன் சேர்ந்து தடம் புரண்டனர்.

இவர்களை கடமையிலிருந்த காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்பு பொலிசார் கைதுசெய்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். குறித்த டிப்பர் ரக வாகனம் பொலிசார் துரத்தி சென்ற போது இடைவழியே ஏற்றி வந்த மணலை பறித்தவாறு சென்றதுடன் மீதமிருந்த மணல் வாகனம் தடம் புரண்ட இடத்திலேயே கொட்டிக் கிடந்தது.

தடம் புரண்ட வாகனத்தை கனரக வாகனத்தில் உதவியுடன் தூக்கிய பொலிசார் வீதியில் இருந்த மணலையும் அப்புறப்படுத்தினர்.

இதன்போது பளைப்பகுதியைச் சேர்ந்த குறித்த டிப்பர் வாகனத்தின் உரிமையாளர் எனக் கருதப்படும் இளைஞர் ஒருவரையும் அவ்விடத்தில் வைத்து காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிசார் கைது செய்தனர்.

பாடசாலை மாணவர்கள் பயணம் செய்து கொண்டிருந்த குறித்த பகுதியில் டிப்பர் ரக வாகனம் சட்டவிரோத மணலுடன் வேகமாக பயணம் செய்வதாக காங்கேசன்துறை விசேட குற்றத்திடுப்பு பொலிசாருக்கு கிடைத்த ரகசிய தகவலினை அடுத்து குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதில் கைதான மூவரும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# இணைய பாதுகாப்புச் சட்டம் இரத்து செய்யப்படவேண்டும்

## மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம்

கொழும்பு, பெப். 08

சமீபத்தில் இயற்றப்பட்ட இணைய பாதுகாப்பு சட்டம் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் கடுமையான கவலைகளை வெளிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக இணையப் பாதுகாப்பு சட்ட வரைவு செயல்முறையைச் சுற்றியுள்ள இரகசியம் மற்றும் அதனை நிறைவேற்றுவதற்காக அவசர நோக்கம் குறித்தும் கேள்வியெழுப்பியுள்ளது.

மேலும் குறித்த சட்டம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் திருத்தங்களை அரசாங்கம் முழுமையாக பின்பற்றத் தவறியதையும் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியலமைப்பு பற்றிய கவலைகள் எழுப்பும் அதேநேரம் இது சட்டத்தின் ஆட்சியை பலவீனப்படும் என்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே அதனை உடனான டியாக் இரத்து செய்து, இணைய பாதுகாப்பின் கவலைகளை உரியவகையில் நிவர்த்தி செய்து சட்டத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# 4 கோடி ரூபாய் பெறுமதியான சிகரெட்டுகளுடன் இருவர் கைது!



கொழும்பு, பெப். 08

சுங்க வரி செலுத்தாமல் கடத்திச் செல்லப்பட்ட நான்கு கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை எடுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு பெரியமுல்ல பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சிகரெட் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

பிரத்தியேக வெளிநாட்டு வர்த்தக நாமத்தின் சுமார் 400,000 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நாத்தாண்டிய மற்றும் கொச்சிக்கடை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. அதேவேளை, சிகரெட் தொகைகளை ஏற்றிச் சென்ற லொறியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)



# கட்டுப்பாட்டை இழந்து கடைக்குள் புகுந்த கார்!

முல்லைத்தீவு, பெப். 08

வேகக் கட்டுப்பாட்டை இழந்த காரொன்று வீதியை விட்டு விலகி கடையொன்றுக்குள் புகுந்த சம்பவம் நேற்று முன் தினம் முல்லைத்தீவில் இடம்பெற்றுள்ளது.

ஏ-35 பிரதான விதி ஊடாக புதுகுடியிருப்பு பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த காரொன்றே, விசுவமடு பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை முந்தி செல்ல முற்பட்ட போது, வேகக் கட்டுப்பாட்டை இழந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

இதன் போது அக்கடையின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாடிக்கையாளர்களின் இரண்டு மோட்டார் சைக்கிள் களையும், துவிச்சக்கரவண்டி மற்றும் முச்சக்கரவண்டியொன்றையும் குறித்த கார் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இவ் விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# மீண்டும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படாத நிலையை உருவாக்குவோம்

## அமைச்சர் அலி சப்ரி கூறுகிறார்



கொழும்பு, பெப். 08

நாடுகளுக்கிடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வீழ்ச்சியடையாத நிலைக்குக் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வேலைத்திட்டம் வலுப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, வியட்நாம் மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை கைச்சாத்திட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி,

ஸ்திரமான பொருளாதாரத்தை உருவாக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வையின்படி, போட்டித்தன்மை வாய்ந்த புதிய சந்தைகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு இலங்கையின் பொருளாதாரத்திற்கு நேரடியாக பங்களிப்புகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

அதன் வரலாற்று சிறப்புமிக்க முன்னெடுப்பாக, அண்மையில் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை தற்போது இருபத்தி இரண்டு கோடி நபர்களுள்ள சந்தைக்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதைக் கண்டுகொள்ளலாம்.

ஆனால் உலகில் பாரிய அளவில் சந்தை வாய்ப்புகள் உள்ளன. அபிவிருத்தி அடைந்த பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் அந்தப் பாரிய சந்தை வாய்ப்புகளை சிறப்பாகக் கையாள்வதன் மூலம் தங்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்தியுள்ளன. வியட்நாம் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் இன்று உலகின் பாரிய சந்தைகளுடன் சுதந்திர பொருளாதார ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதன் மூலம் வலுவான பொருளாதாரத்தை அடைந்துள்ளன. இதன் மூலம் ஏற்றுமதி பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்.

1991 ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் சுமார் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. அதே காலகட்டத்தில் பங்களாதேஷ் மற்றும் வியட்நாமும் இதே பெறுமதியில் இருந்தன. ஆனால் 2022 இல் வியட்நாமின் ஏற்றுமதி வருமானம் 373 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மாறியுள்ளது. இவை அனைத்துக்கும் அவர்கள் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தியமை தான் பிரதான காரணமாகும்.

ஆசிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டு இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நீண்டகால வேலைத்திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஈடுபட்டுள்ளார். அது வெற்றியடையும் பட்சத்தில் இலங்கைக்கு வீழ்ச்சியடையாத பொருளாதாரத்தை உருவாக்க முடியும் -என்றார். (அ)

# எமது கறுப்பு தினப் போராட்டத்தை அரசியல்வாதிகள் திசை திருப்பினர்!

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் குற்றச்சாட்டு**

மட்டக்களப்பு, பெப். 08

**“தங்களால் முன்னெடுக்கப்பட்ட கறுப்பு தினப் போராட்டத்தை அரசியல் வாதிகள் திசைதிருப்பியுள்ளனர்” என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மட் டக்களப்பு மாவட்டத் தலைவி திருமதி அ.அமலநாயகி தெரிவித்தார்.**

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற கறுப்பு தின போராட்டத்தை வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரும் சேர்ந்து, வடக்குக் கிழக்கு தழுவிய போராட்டமாக முன்னெடுத்திருந்தோம்.

இதன்போது எங்களுக்கு போராட்டத்தை நடத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதனால் நாங்கள் அடுத்த கட்டமாக போராட்டத்தை நடத்துவதற்காக மதகுருமார்களை ஒழுங்குபடுத்தியிருந்தோம்.

எனினும் முகநூலில் சாணக்கியனின் தலைமையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை மக்களுக்கு தெளிவூட்ட வேண்டிய தேவை எனக்கு இருக்கின்றது. எங்களுடைய போராட்டங்களை திசை திருப்புகின்ற வகையில் அரசியல்வாதிகளால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது உணர்வுகளுடன் நமது உயிர்களுடன் விளையாடாமல் நமது உறவுகளை தேடும் பயணம் இது இந்தப் பயணத்திற்கு அனைவரும் ஒரு உந்து சக்தியாக இருக்க வேண்டும். அதை விடுத்து தங்களுடைய பெயர்களை தக்க வைத்துக் கொள்வதற்காக அல்லது தங்களை முன்னுரிமையாக காட்டுவதற்காக எம்மை அவமானப்படுத்தும் செயற்பாடுகளை யாரும் இறங்கக்கூடாது என தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன்-என்றார். (அ)

# பாடசாலைக்கு கெஹலியவின் பெயர் இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு!

கொழும்பு, பெப். 08

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறி, பாடசாலை ஒன்றிற்கு முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் பெயர் வைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை உடனடியாக நீக்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டி மாவட்டத்தின் குண்டசாலை பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

அந்த பெயரை உடனடியாக நீக்க வேண்டும். கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உயிருடன் உள்ள ஒருவரின் பெயரை பாடசாலைக்கு பெயரிட முடியாது.

ஆனால் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சமூகத்திற்கு தவறான ஒரு முன்னுதாரணம்.

எனவே குண்டசாலை பிரதேசத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைக்கு கெஹலிய ரம்புக்வெல்ல ஆரம்ப பாடசாலை என பெயரிட்டுள்ளார்.

அதனை உடனடியாக நீக்குங்கள். குறிப்பாக உயிருடன் இருக்கும் ஒருவரின் பெயரை பாடசாலைகளுக்கு வைப்பதற்கு எதிராக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# புற்றுநோய்க்கான மருந்துகளை பெற்றுக்கொள்ள புதிய ஒப்பந்தம்!



கொழும்பு, பெப். 08

இலங்கையில் புற்று நோயாளர்களின் சிகிச்சைக்கு தேவையான 13 அத்தியாவசிய மருந்துப் பொருட்களை சுகாதார அமைச்சுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தமொன்று சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையில் இடம்பெற்றது.

அமெரிக்க தொண்டு நிறுவனம் ஒன்றுடன் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால மற்றும் அமெரிக்க தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இவ்வாறு வழங்கப்படுகின்ற மருந்துகளின் பெறுமதி சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்ட இந்த அத்தியாவசிய புற்றுநோய் மருந்துகள் ஒரு வருடத்திற்கு புற்றுநோய் சிகிச்சைக்கு போதுமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரண்டாவது கட்டத்தின் கீழ், அடுத்த சில மாதங்களில் நாட்டிற்குத் தேவையான மற்றுமொரு மருந்துப் பொருட்களை விநியோகிக்க அமெரிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை நாட்டு மக்களுக்கு முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சேவையாக சிறந்த சுகாதார சேவையை அரசாங்கம் வங்கி வருவதாக சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன இதன்போது தெரிவித்துள்ளார்.

இதற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும், இலங்கையில் சிறந்த சுகாதார சேவையை பேணுவதற்கு அனைத்து சுகாதார ஊழியர்களும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# பழைய இரும்பு சேகரிப்பு நிலையத்தில் வெடிப்பு!

**ஒருவர் உயிரிழப்பு**

கொழும்பு, பெப். 08

அவிசாவளை, மாதொல பிரதேசத்தில் உள்ள பழைய உலோக சேகரிப்பு நிலையத்தில் நேற்று முன் தினம் நபர் ஒருவர் உயிரிழந்தமை, வெடிக்கும் துப்பாக்கிக் குழல் அல்லது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருளின் வெடிப்பு காரணமாக ஏற்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குப்பைகள் சேகரிக்கப்படும் இந்த இடத்தில் நேற்று முன் தினம் காலை தொழிலாளி ஒருவர் பிற்பகல் கொண்டு வரப்பட்ட பழைய இரும்பை தரம் பிரித்துக் கொண்டிருந்த போது இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியில் போதைக்கு அடிமையான நபர் ஒருவர் வனப்பகுதியில் இருந்ததாக குறிப்பிட்டு பழைய இரும்பு உள்ளிட்ட பொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்து வந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, கழிவுப் பொருட்களை பிளாஸ்ரிக் மற்றும் இரும்பு பொருட்களாக வகைப்படுத்திக்கொண்டிருந்த ஊழியர் ஒருவர் வெடித்ததில் உயிரிழந்தார். பழுதான உலோகக் குழாயை பழைய உலோகங்கள் சேகரிக்கும் இடத்தில் வீசியதில் இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெடித்ததில், இறந்தவரின் மார்பில் ஏதோ ஒன்று தாக்கி பலத்த காயம் அடைந்ததாக மூத்த போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மஸ்கெலியா கலேவெல வத்த பிரதேசத்தை சேர்ந்த கந்தசாமி ஜெகன் (வயது 48) என்ற கழிவு சேகரிப்பு நிலையத்தின் ஊழியர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அரச பரிசோதகர் அலுவலக அதிகாரிகளும் அழைக்கப்பட்டு உள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சீதாவக்கா பிரிவு குற்றப் பிரிவு ஆய்வக அதிகாரிகளும் இந்த இடத்திற்கு வந்து ஆய்வு செய்துள்ளனர். அங்கு, இந்த இடத்தில் ஹக்கபடஸ் போன்ற ஒன்று வெடித்துள்ளதாக ஊகித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நீதவான் விசாரணைகள் இடம்பெறவுள்ளதுடன், உயிரிழந்தவரின் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை இடம்பெற உள்ளதாக அவிசாவளை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சீதாவக்க பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின் பேரில் அவிசாவளை தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கைதான இந்திய மீனவர் நிபந்தனையில் விடுதலை!

யாழ்ப்பாணம், பெப். 08

நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட ஆறு இந்திய மீனவர்களும் நிபந்தனையின் அடிப்படையில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கடற்படையினரால் இரண்டு படகுகளில் கையகப்படுத்தப்பட்டதுடன் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீரியல் வள திணைக்களத்தினரால் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மீனவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து மூன்று குற்றச்சாட்டுகளுக்கு தலா ஆறு மாத கால சாதாரண சிறைத் தண்டனை விதித்து அதனை ஐந்து வருடங்களுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஒத்தி வைத்ததுடன் இரண்டு படகுகளும் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. (அ)

# போக்குவரத்தில் பெண்கள்மீது பாலியல் சீண்டல்களில் ஈடுபடுவோர் கைதாவர்!

கொழும்பு, பெப். 08

பொதுப் போக்குவரத்து சேவைகளை பயன்படுத்தும் போது பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைகளில் ஈடுபடும் நபர்களை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதற்காக பெண் பொலிஸார் மற்றும் சிவில் உடையில் ரகசிய கேமரா பொருத்தப்பட்ட பொலிஸார் அடங்கிய 234 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# ரணிலுடன் உரையாடிய அமெரிக்க இராஜதந்திரி

## ஜனாதிபதி தேர்தல் குறித்து ஆராய்வு

கொழும்பு, பெப். 08

**அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான இரா ஜதந்திரி ஒருவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை தொலைபேசியில் சுமார் அரை மணி நேரம் உரையாடியுள்ளார்.**

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவே இந்த உரையாடல் இடம்பெற்றதாக கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அல்லது ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த கூட்டுக் கட்சியின் சார்பில் சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பது குறித்து அமெரிக்க இராஜதந்திரி பரிந்துரை வழங்கியிருக்கின்றார்.

அத்துடன், "திருகோணமலையை மையப்படுத்திய அமெரிக்காவின் மில்லேனியம் சவால்கள் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கு இணங்கினால் ரணில் மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்றும் அமெரிக்க இராஜதந்திரியின் உரையாடல் தொனி அமைந்ததாகவும் அந்த உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவுடன் மிகச் சமீபகாலமாக முரண்பட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்கா, நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் புவிசார் அரசியல் நோக்கில் தமக்கு ஆதரவான ஒருவரை வேட்பாளராக நியமிக்க தீவிர முயற்சியெடுத்து வருகின்றது.

இப்பின்னணியிலேயே இந்த தொலைபேசிய உரையாடல் இடம்பெற்றதாக கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன. (அ)

# மியன்மாரில் உள்ள இளைஞர், யுவதிகள்; தாய்லாந்தின் உதவியை நாடும் இலங்கை

கொழும்பு, பெப். 08

மியன்மாரில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் குழுவொன்றினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் 56 இலங்கைப் பிரஜைகளை விடுவிப்பதற்கு உதவுமாறு தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசினிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கும் வகையில் அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையிலே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாக மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையர்கள் 56 பேர் மியன்மாரில் உள்ள ஆயுதக் குழுவொன்றினால் தடுத்து வைக்கப்பட்டு இணையக் குற்றங்களில் ஈடுபடுவதற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கணினி தொடர்பான தொழில் வாய்ப்புகளை வழங்குவதாக வாக்குறுதி அளித்து ஏமாற்றப்பட்ட குறித்த இலங்கையர்கள் மியன்மாருக்கு அழைத்துச் செல்லப்பட்டு தாயலாந்து எல்லைக்கு அருகில் உள்ள மூன்று தனித்தனி இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மோய் ஆற்றுக்கு அருகிலுள்ள பகுதியில் 8 இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், தாயலாந்து எல்லையில் இருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் 18 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதனிடையே, தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் மற்றும் யுவதிகள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதாகவும் சிலர் உடல் மற்றும் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)



# செல்வம் எம்.பியின் தாயின் இறுதிச்சடங்கு

மன்னார், பெப். 08

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் தாயார் அமிர்தலிங்கம் செபமாலையின் இறுதி நல்லடக்கம் நேற்று மதியம் இடம் பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் தாயார் அமிர்தலிங்கம் செபமாலையின் தனது 84 ஆவது வயதில் கடந்த திங்கட்கிழமை காலமானார்.

இந்நிலையில் அவரது பூதவுடல் மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

நேற்று புதன்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக பல ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அதனை தொடர்ந்து பூதவுடல் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு தோட்டவெளி ஜோசப் வாஸ் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு விடத்தல் தீவு பொது மயானத்தில் நல்லடக்கம் செய்ய எடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காலநிலை அனர்த்தங்களுக்கு தீர்வுகள் தேட இலங்கை ஆதரவு!

கொழும்பு, பெப். 08

காலநிலை அனர்த்தங்களுக்கு தீர்வுகளை தேடுவதற்காக பிராந்திய மற்றும் சர்வதேச அளவிலான முயற்சிகளுக்கு இலங்கை முழுமையான ஆதரவை வழங்குமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக இலங்கையில் சர்வதேச காலநிலைப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க தீர்மானித்திருப்பதாகவும், ஆசிய மற்றும் ஆபிரிக்க வலயங்களின் காலநிலை சவால்களுக்கு ஈடுகொடுப்பதற்கான முக்கியமான பணியை அதனால் ஆற்ற முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய வலயத்தை கார்பன் உமிழ்வு பிராந்தியமாக மாற்றுவதன் ஊடாக நிலையான அபிவிருத்தி திட்டங்களில் முதலீடு செய்வதற்கு தனியார் துறையை ஊக்குவிக்க முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், பிராந்தியம் முழுவதிலும் உள்ள வாய்ப்புகளை ஆராய்வதற்காக இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் செயற்பாடுகளையும் ஜனாதிபதி ரணில் வலியுறுத்தியுள்ளார்.

வெப்ப வலயத்தின் காலநிலை மாற்றம் தொடர்பான முயற்சிகள் குறித்து அறிக்கையிடுவதற்கு இலங்கை மற்றும் அதனுடன் தொடர்புபடைய நாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய வகையில் நிபுணத்துவ குழுவொன்று நிறுவப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலநிலை மாற்றம் காரணமாக குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2 சதவீதம் வரை குறையக்கூடும் என்பதனால் பொருளாதார பாதிப்புக்கள் குறித்து கவனம் செலுத்தி அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசரத் தேவையையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# விசேட சிகிச்சை ஏதும் கோரவில்லை - கெஹலிய

கொழும்பு, பெப். 08

முன்னாள் சுகாதார மற்றும் சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தன்னை சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்து தனியார் வைத்தியசாலைக்கு மாற்றுமாறும், சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளை வழங்குமாறும் கோரியுள்ளதாக பரவலான ஊகங்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள போதிலும், அவர் அவ்வாறான விசேட சிகிச்சைகளை நாடவில்லை அல்லது பெற்றுக்கொள்ளவில்லை என சிறைச்சாலை வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

சிறைச்சாலை வைத்தியசாலையில் தம்மைக் காவலில் வைப்பது தொடர்பில் முன்னாள் அமைச்சர் முறைப்பாடுகள் அல்லது விசேட கோரிக்கைகள் எதுவும் முன்வைக்கவில்லை எனவும், மருத்துவ கவனிப்பு தேவைப்படும் உடல்நல பிரச்சினை களுக்கு ஏனைய கைதிகளை போலவே சிகிச்சை பெற்று வருவதாகவும் சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அவரை ஒரு தனியார் மருத்துவமனைக்கு மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டாலும், அப்படி செய்வதற்கு எந்த நடைமுறையும் இல்லை என்று தெரிவித்த அவர், "இவை உண்மைக்குப் புறம்பான கூற்றுகள். உண்மையில், கைதியை தனியார் மருத்துவமனைக்கு அனுப்பும் நடைமுறை இல்லை.

எவ்வாறாயினும், ஒருவர் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் போது கைது செய்யப்பட்டால், அவ்வாறான சந்தர்ப்பங்களில், அவரை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு விடுவிக்க முடியுமா என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் அந்த வைத்தியசாலையின் விசேட வைத்தியருக்கு உண்டு. சில காரணங்களால் சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்து வேறு வைத்தியசாலைக்கு கைதிகள் மாற்றப்பட வேண்டுமாயின் அவர்கள் தேசிய வைத்தியசாலைக்கு மாத்திரமே மாற்றப்படுவார்கள்" என்றார்.

முன்னாள் அமைச்சர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் போன்ற விசேட சிகிச்சைகளை அவர் நாடியதாக பல்வேறு தரப்பினரும் குற்றஞ்சாட்டினர். சிறை மருத்துவமனையில் அவருக்கு 'மிக முக்கியமான நபர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை' அளிக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யால சரணாலயத்தில் கஞ்சா பயிர்ச்செய்கை

கொழும்பு, பெப். 08

மொனராகலை யால சரணாலய குபுக்கன் ஓயாவிற்கு அருகில் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த கஞ்சா பயிர்செய்கை ஒன்றை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மொனராகலை ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகளுடன் இணைந்து சுற்றிவளைத்தனர்.

இச்சுற்றிவளைப்பின் போது அறுவடைக்கு தயாராக இருந்த 16800 கஞ்சா செடிகளும் விற்பனைக்கு தயாராக இருந்த 1658.40 கிலோகிராம் உலர்ந்த கஞ்சாவும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு உள்நாட்டு துப்பாக்கிகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் பொருட்களை சியம்பலாண்டுவ நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய கதிர்காமம் பிரதேசத்தில் அரை ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த மேலும் 7000 கஞ்சா செடிகளுடன் மூவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்யதுள்ளதுடன், கதிர்காமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு நாளை மறுதினம்

அம்பாறை, பெப். 08

**தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெறவுள்ளது என உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.**

பட்டமளிப்பு விழா தொடர்பில் பல்கலைக்கழக பிரதான சபை மண்டபத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு பேசியபோது, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பட்டமளிப்பு விழா, ஒவ்வொரு நாளிலும் தலா மூன்று அமர்வுகளாக நடைபெறும் என்றும், மொத்தமாக 2152 பேருக்கு, இதன்போது பட்டங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

“முதலாம் நாளின் முதலாவது அமர்வில் கலை கலாசார பீடத்தைச் சேர்ந்த 342 பேரும், இரண்டாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 355 பேரும் மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 430 பேரும் - பட்டம் பெற உள்ளனர்” என உபவேந்தர் கூறினார்.

இரண்டாம் நாளில் இடம்பெறவுள்ள நான்காவது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தை சேர்ந்த 314 பேரும், ஐந்தாவது அமர்வில் கலை கலாசார பீடத்தை சேர்ந்த வெளிவாரி மாணவர்கள் 350 பேரும் ஆறாவது அமர்வில் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த வெளிவாரி மாணவர்கள் 361 பேரும் பட்டங்கள் பெறவுள்ளனர்.

இதனடிப்படையில் மொத்தமாக 1441 உள்வாரி மாணவர்களும், 711 வெளிவாரி மாணவர்களுமாக மொத்தம் 2152 பேருக்கு - இந்த விழாவில் பட்டங்கள் வழங்கப்பட உள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழா - தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் நெறிப்படுத்தலில், பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் நடைபெறவுள்ளது.

தொழிநுட்ப பீடத்தினால் பரிந்துரைக்கப்பட்ட மொறட்டுவ பல்கலைக்கழக பேராசிரியர் பியசிறி - மேற்படி பட்டமளிப்பு விழாவின் போது, கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முதல்தடவையாக பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தினூடாக இந்தப் பட்டமளிப்பு விழா - நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளதகாவும் உபவேந்தர் ரமீஸ் தெரிவித்தார்.

(அ)

# பாடசாலையில் பல் ஊடக அபிவிருத்திப் பிரிவு திறப்பு



அம்பாறை, பெப். 08

சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயத்திற்கு மர்ஹூம் மயோன் முஸ்தபா ஞாபகர்த்த நினைவாக பல் ஊடக அபிவிருத்திப் பிரிவு திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் “றிஸ்லி முஸ்தபா கல்வி எயிட் அமைப்பின்” தவிசாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகவும்,சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்சுடின், மற்றும் ஆசிரியர்கள், மாணவகள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# புலமையாளர் கௌரவிப்பு



அம்பாறை, பெப். 08

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேச சபைக்குட்பட்ட அமீர் அலிபுர சன சமூக நிலைய அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட புலமையாளர் கௌரவிப்பு நிகழ்வு அமீர் அலிபுர சனசமுக நிலைய அமைப்பின் தலைவர் எஸ். எம் பாஹிர் அவர்களின் தலைமையில் அண்மையில் இறக்காமம் அமீரலிபுர திறந்த வெளி மைதானத்தில். நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு இறக்காமம் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி ஜே.எம். மஹிந்த செனரத்தின அவர்கள் அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கடந்த 2023 புலமை பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்குமேல் பெற்ற ஹாறூன் ஆயிஷா அனிக்கா , இல்யாஸ் பாதிம துஸ்ஷஹ்ரா, இர்ஷான் முஹம்மத் ஆத்திப் லமி, அலாவுதீன் முஹாபிஸ்அகமட் (விசேட தேவையுடைய) மாணவன்) ஆகியோர் அதிதிகளால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர் .

இந்நிகழ்வில் கிரம சேவகர் யூ எல் அமீர், ஐ.இல்யாஸ் ஆசிரியர் மற்றும் அமைப்பின் உத்தியோகத்தர்கள் பாடசாலை அதிபர் எம்.எஸ் லாஹிர் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# 16அடி உயரம் கொண்ட சிவலிங்கத் தியான மண்டபம் கொக்கட்டிச்சோலையில் திறப்பு!

மட்டக்களப்பு, பெப். 08

இந்தியாவின் புகழ்பெற்ற 12 சிவாலயங்களிலிருந்து பெறப்பட்ட சிவலிங்கங்கள் மற்றும் 16 அடி உயிரம் கொண்ட சிவலிங்க தியானம் மண்டபம் என பல்வேறு அம்சங்கள் கொண்ட ஜோதிர்லிங்க அருங்காட்சியம் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினால் இந்த அருங்காட்சியம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையத்தின் பொறுப்பாளரும் இலங்கை நிருவாக குழு உறுப்பினருமான சகோதரர் வீ.கே.சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அவுஸ்திரேலியா நாட்டில் இருந்து வருகை தந்த தேசிய ஒருங்கிணைப்பாளர் தெய்வீக சகோதரர் சார்லி ஹொஹ் கலந்துகொண்டனர்.





இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் கலைக்கூடத்தின் நினைவு படிகம் திரை நீக்கம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டதுடன் இதனை தொடர்ந்து சிவலிங்க தோற்றத்தில் 16 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட தியான மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் இந்தியாவிலிருந்து வரலாற்று புகழ்பெற்ற 12 சிவ ஆலயங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட ஜோதிர்லிங்கக் கலைக்கூடமும் திறந்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# கல்முனையில் சேவை நலன் பாராட்டு விழா

அம்பாறை, பெப். 08

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சுமார் 15 வருடங்களாகச் சேவையாற்றி 2024.01.26ஆம் திகதி ஓய்வுபெற்ற திருமதி எஸ். ஜே.ஏ.கபூர் பிரதி அதிபருக்கான சேவை நலன் பாராட்டு விழா பாடசாலை நலன்புரிக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹூதுல் நஜீம், விசேட அதிதியாக முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், இஸ்லாமாபாத் முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் அதிபருமான ஓய்வு பெற்ற ஏ.சி.எம். தௌபீக் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம். றிசாத்தின் வழிகாட்டலிலும், பாடசாலை நலன்புரிச் சங்கத் தலைவர் எம்.ரீ.ஏ. முனாப்பின் தலைமையிலும் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்ட திருமதி எஸ். ஜே.ஏ. கபூர் பிரதி அதிபரின் சேவைகளைப் பாராட்டி அதிபர், அதிதிகள் மற்றும் ஆசிரியர்கள் என பலரும் பேசியதுடன் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப் பாவுடன் பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (அ)

# சாய்ந்தமருதில் பாடசாலை செல்லாது இருப்போருக்கு எதிராக நடவடிக்கை

அம்பாறை, பெப். 08

கட்டாயக் கல்வி சட்டத்தின்படி 5 வயது முதல் 16 வயது வரையிலான மாணவர்கள் பாடசாலை செல்லாது காரணங்கள் கூறிக்கொண்டு வீடுகளில் தரித்திருந்து தமது வாழ்வை கல்வி அறிவின்றி சூனியமாக்கும் மாணவர்களை மீளப் பாடசாலைகளில் இணைக்கும் நோக்குடன் வீட்டுத் தரிசிப்பை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இம் மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாது கடைகளிலும் வேறு தொழில் நிறுவனங்களிலும் தொழில் புரிவதோடு, சிலர் யாசகம் கேட்கும் தொழிலிலும்,மீன்பிடி, விவசாயம் போன்ற தொழில்களிலும் ஈடுபடுவதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதனை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை வலயக் கல்வி அலுவலகம் சாய்ந்தமருது பிரதேச செயலகமும் பொலிசாரின் உதவியுடன் மேற்கொள்ளும் இன் நடவடிக்கைக்கு பொது மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஸிக் தெரிவித்துள்ளார்.

(அ)

# இஸ்ரேலுடன் போர் நிறுத்தத்துக்கு சாதகமான பதில் வழங்கிய ஹமாஸ்



நியூயோர்க், பெப். 08
இஸ்ரேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஹமாஸ் சாதகமான பதிலை வழங்கியுள்ளதாக போர்நிறுத்த பேச்சு வார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்கும் கட்டார் தெரிவித்துள்ளது.
காசா மீதான இஸ்ரேலிய தாக்குதலை நிறுத்துவதற்கான கோரிக்கையை மீண்டும் ஹமாஸ் வலியுறுத்தியுள்ள நிலையில் இந்த செய்தியை கட்டார் வெளியிட்டுள்ளது.
நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கனும் கட்டாரின் பிரதமரும் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.
கட்டர், எகிப்து மற்றும் அமெரிக்காவால் முன்மொழியப்பட்ட முன்மொழிவுக்கு ஹமாஸ் வழங்கிய பதில், இஸ்ரேலிய அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளதாக அண்டனி பிளிங்கன் கூறியுள்ளார்.
மேலும் போர்நிறுத்த ஒப்பந்தம்ம் மிகவும் அத்தியாவசியமானது என்றும் அதனை அடைய தொடர்ந்து இடைவிடாமல் பாடுபடுவோம் என்றும் அன்டனி பிளிங்கன் கூறியுள்ளார்.
இதேநேரம் மத்தியஸ்தர்கள் எதிர்கொள்ளும் பல சவால்கள் இருப்பதாகவும், காசாவில் நடக்கும் நிகழ்வுகள் பேச்சு வார்த்தையின் போக்கை பாதிக்கும் என்றும் கட்டார் பிரதமர் கூறியுள்ளார். (அ)

# தேர்தலுக்கு முன் பாகிஸ்தானை உலுக்கிய குண்டு வெடிப்புகள்!



இஸ்லாமாபாத், பெப். 08
பாகிஸ்தானின் பலுசிஸ்தானில் தேர்தல் வேட்பாளர்களை குறிவைத்து நேற்று புதன் கிழமை இரு வேறு குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.
பாகிஸ்தானின் பொதுத் தேர்தலுக்கு ஒரு நாள் முன்னதாக இந்த தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.
தாக்குதலில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டதாகவும் சுமார் 40 பேர் காயமடைந்ததாகவும் ஜியோ செய்திச் சேவை தெரிவித்துள்ளது.
பலுசிஸ்தானின் பிஷினில் ஒரு சுயேச்சை வேட்பாளர் அலுவலகத்திற்கு வெளியே நடத்தப்பட்ட முதல் தாக்குதலில் 15 பேர் உயிரிழந்தனர் மற்றும் 30 க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.
பிஷினின் கானோசாய் பகுதியில் உள்ள சுயேச்சை வேட்பாளர் அஸ்பாண்ட் யார் கான் கக்கரின் அரசியல் அலுவலகத்திற்கு வெளியே குண்டு வெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டது.

**20 பேர் உயிரிழப்பு**

இதன்போது காயமடைந்தவர்கள் கானோசாய் தெஹ்சில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.
காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் ஆபத்தான நிலையில் உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.
பிஷினில் வெடிப்பு நிகழ்ந்த போது சுயேச்சை வேட்பாளர் அவரது அலுவலகத்திற்குள் இருக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.
கிலா சைபுல்லாவில் உள்ள ஜமியத் உலமா இஸ்லாம்-எஃப் வேட்பாளர் மௌலானா வாசியாவின் அலுவலகத்திற்கு வெளியே மற்றொரு தாக்குதலும் புதன்கிழமை நடத்தப்பட்டுள்ளது.
இந்த தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 10 பேர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.
காயமடைந்தவர்கள் மாவட்ட தலைமை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# இறைச்சியை முற்றிலும் தவிர்ப்பது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும்!

## பிரித்தானிய பல்கலைக்கழகத்தின் புதிய ஆய்வு சைவ உணவை விட இறைச்சியில் புரதம் அதிகம்

லண்டன், பெப். 08
புற்றுநோய், இதய நோய், உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவற்றின் அபாயத்தை மேற்கோள் காட்டி இறைச்சி உண்பதற்கு எதிரான சில ஆய்வு அறிக்கைகள் கடந்த ஆண்டுகளில் வெளியாகியிருந்தன.
எனினும், புதிய ஆய்வு அறிக்கைகள் இறைச்சியை முற்றிலுமாகத் தவிர்ப்பது தீங்கு விளைவிக்கும் என்று பிரித்தானிய ஊடகமான தி ரெலிகிராப் தெரிவித்துள்ளது. இறைச்சியை முற்றிலுமாக கைவிடு வது உடல் நலத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி, உயிரிழப்பை அதிகரிக்கும் என்று பிரித்தானியாவில் உள்ள எடின்பர்க் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்ட அறிக் கையை ரெலிகிராப் வெளியிட்டுள்ளது.
இறைச்சியை முற்றிலுமாகத் தவிர்ப்பது மற்றும் அதில் உள்ள ஊட்டச்சத்துக்களின் மாற்று ஆதாரங்களைக் கண்டறியாதது உடலில் செலினியம், இரும்பு மற்றும் துத்தநாகக் குறைபாடுகளுக்கு வழிவகுக்கும்.
அவுஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்ட் பல்கலைக்கழகத்தின் உயிரியல் மருத்துவ ஆராய்ச்சியாளரான கலாநிதி வெஹிடேரியன், உணவை கண்டிப்பாக கடைபிடிப்பது ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஆபத்தை விளைவிக்கும் என்கிறார்.
அவரது தலைமையில் 175 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுக்குப் பிறகு தயாரிக்கப்பட்ட அறிக்கையில். இறைச்சி உணவு பொது சுகாதாரத்தை மோசமாக பாதிக்கும் மாறாக ஆயுட்காலம் அதிகரிப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.
பழங்காலத்திலிருந்தே மனிதர்கள் மாமிச உண்ணிகளாக இருந்ததாகவும், இறைச்சி உண்ணும் பழக்கம் அவர்களுடன் பயணித்ததாகவும் அறிக்கை கூறுகிறது.
பிரித்தானிய சுகாதார நிபுணர் பேராசிரியர் ஜேம்ஸ் குட்வின் அவதானிப்பின்படி, மக்கள் வயதாகும்போது இறைச்சி மிகவும் பயனுள்ள மற்றும் பொருத்தமான ஊட்டச்சமாக பரிந்துரைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
இறைச்சியில் உள்ள புரதங்கள் முழுமையாக இருப்பதால், அவற்றை சைவ உணவை விட இறைச்சியிலிருந்து பெறுவது எளிது என்கிறார் கலாநிதி லூசி மில்லர் தெரிவித்துள்ளார்.
சுகாதார நிபுணர் வைத்தியர் என் சீனிவாசனின் கூற்றுப்படி, சிவப்பு இறைச்சி இரும்பு, துத்தநாகம் மற்றும் விற்றமின் பி 12 ஆகியவற்றின் சிறந்த ஆதாரங்களில் ஒன்றாகும்.
"அதாவது இறைச்சிக்கு இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஆற்றல் உள்ளது, மேலும் உணவில் துத்தநாகம் இல்லாதது இதய நோய் மற்றும் பக்கவாதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
அதனுடன், இறைச்சியில் உள்ள வைட்டமின் பி6, பி9 மற்றும் பி12 ஆகியவை இதய நோய் மற்றும் மாரடைப்பு அபாயத்தைக் குறைக்கின்றன" என்று கூறியுள்ளார்.
ஒரு நாளைக்கு 50 கிராம் இறைச்சி சாப்பிடுவது அல்சைமர் நோயின் அபாயத்தைக் குறைக்கும்.
மூளை ஆரோக்கியத்திற்கான ஐந்து மிக முக்கியமான ஊட்டச்சத்துகளான விற்றமின் பி12, விற்றமின் டி, ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள், துத்தநாகம் மற்றும் மெக்னீசியம் ஆகியவை பெரும்பாலும் இறைச்சியிலிருந்து கிடைப்பதாக வைத்தியர் குட்வின் தெரிவித்துள்ளார்.
கோழி மற்றும் மீனை விட அதிக அளவு கொலஸ்ட்ரால் இருப்பதால் சிவப்பு இறைச்சி ஆரோக்கியத்தில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் அஞ்சுகின்றனர்.
ஆனால் இப்போது பல ஆய்வுகள் உணவில் உள்ள கொழுப்பு, சர்க்கரை மற்றும் கார்போஹைட்ரேட்டுகளின் கலவைதான் இரத்தக் கொழுப்பைப் பாதிக்கிறது என்பதைக் காட்டுகிறது.
மேலும், பதப்படுத்தப்பட்ட இறைச்சியை உண்பதால் பலவிதமான உடல்நலக் கோளாறுகள் ஏற்படும் என சுகாதார நிபுணர்கள் எச்சரித்து வருகின்றனர். (அ)

# சீனாவில் கடும் பனிப்பொழிவு



பீஜிங், பெப். 08
சீனாவில் ஏற்பட்டுள்ள கடும் பனிப்பொழிவால் ஹூபே மாகாணத்தில் உள்ள வுஹாண் பகுதி நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த விடயம் தொடர்பில் வானிலை அவதான மையம் தெரிவிக்கையில்,
மத்திய சீனாவில் இதுவரை இல்லாத அளவாக ஏற்பட்டுள்ள கடும் பனிப்பொழிவு நாளை வரை நீடிக்கும் என தெரிவித்துள்ளது.
இந்நிலையில், சுமார் 4000 வாகனங்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்கி நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்றன.
இதனைத் தொடர்ந்து போக்குவரத்தை சீர்செய்யும் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு, செவ்வாய்க்கிழமை போக்குவரத்து சீராகும் என எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
குறித்த இதேவேளை சீனாவில் எதிர்வரும் சனிக்கிழமை லூனார் புத்தாண்டு தினம் கொண்டாடப்படவுள்ளது. புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி, மக்கள் குடும்பம் குடும்பமாக இரவு நேரங்களில் வெளியே சென்று மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பதற்காகவும், சொந்த ஊர்களுக்கும் வாகனங்களில் படையெடுத்ததால், சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹெலிகொப்டர் விபத்தில் சிலியின் முன்னாள் ஜனாதிபதி உயிரிழப்பு!

சன்ரியாகோ, பெப். 08
ஹெலிகொப்டர் விபத்தில் சிலியின் முன்னாள் ஜனாதிபதி ஹசெபாஸ்டியன் பினேராஹ உயிரிழந்துள்ளார்.
தனக்குச் சொந்தமான ஹெலிகொப்டரை நேற்று முன் தினம் அவர் இயக்கிச் சென்றுள்ள நிலையில், தெற்கு சிலியில் உள்ள ஏரியொன்றில் விழுந்து குறித்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்போது குறித்த ஹெலிகொப்டரில் செபாஸ்டியனுடன் சேர்த்து 4 பேர் பயணித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனையடுத்து தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த மீட்புப் படையினர், செபாஸ்டியனின் சடலத்தைக் கைப்பற்றியுள்ளதோடு, படுகாயங்களுக்குள்ளான ஏனைய மூவரையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.
இந்நிலையில் செபாஸ்டியனின் மரணத்தை முன்னிட்டு மூன்று நாட்கள் தேசிய துக்க தினமாக அனுசரிக்கப்படும் என சிலியின் ஜனாதிபதி கேப்ரியல் போரிக் அறிவித்துள்ளார்.
74 வயதான செபாஸ்டியன் பினேரா இதுவரை இரண்டு முறை சிலியின் ஜனாதிபதியாகப் பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# முட்டை, பாலுக்கு தட்டுப்பாடு இல்லை

## கால்நடை இராஜங்க அமைச்சர்

கொழும்பு, பெப். 08

**எதிர்வரும் காலங்களில் முட்டை மற்றும் பால் தட்டுப்பாடு ஏற்படும் என சில தரப்பினர் கூறுவது உண்மையில்லை. பாலுக்கோ முட்டைக்கோ தட்டுப்பாடு இருக்காது, ஏனெனில் கால்நடை வளர்ப்பாளர்களை வலுப்படுத்த அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்று கால்நடை மேம்பாட்டு இராஜங்க அமைச்சர் டி.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.**



இலங்கையில் 14,000 இற்கும் அதிகமான பண்ணைகள் மூடப்பட்டுள்ளதாகவும், மாகாணங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளின்படி இது அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அண்மையில் பொதுக் கணக்குகள் குழு வெளிப்படுத்தியுள்ளது. இந்த பண்ணைகளில் பெரும்பாலானவை சிறிய அளவிலான பண்ணைகள் என்றும், பெரும்பாலானவை விலங்குகள் திருட்டு காரணமாக மூடப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ஹேரத், வழமையான நிகழ்ச்சிகளைத் தவிர்த்து, கோழிப் பண்ணை மற்றும் பால் பண்ணையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் ‘சனச’ போன்ற சமூக அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றி வருவதாகத் தெரிவித்தார். கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடியின் போது பண்ணைகள் மூடப்பட்டதால் ஏற்படும் பிரச்னைகள் மற்றும் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண சில வெளிநாடுகள் இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

“புதிய விலங்குகளை இனப்பெருக்கம் செய்ய சுமார் 80,000 இனப்பெருக்க விலங்குகள் தேவை. ஆனால் தொற்றுநோய் மற்றும் பிற சிக்கல்களால் அது 20,000 ஆகக் குறைந்தது. மீண்டும், கால்நடை உணவுகளின் விலை உயர்ந்தது. ஆனால் அரசு விவசாயிகளுக்கு பல சலுகைகளை வழங்கியது. உதாரணமாக, சோளத்தின் மீதான இறக்குமதி வரியை நீக்கினோம். இவ்வாறான நகர்வுகளினால், கால்நடைத் தொழிலை சரியான பாதையில் கொண்டு செல்ல எம்மால் முடிந்தது” என்று அவர் மேலும் கூறினார். (அ)

# பாணின் எடையை குறிப்பிடாத 50 பேக்கரிகள் மீது வழக்குகள்!

கொழும்பு, பெப். 08

பாணின் நிர்ணயிக்கப்பட்ட எடைக்கான வர்த்தமானி வெளியிடப்பட்டதை அடுத்து, நுகர்வோர் விவகார அதிகாரசபை அதற்கான சோதனைகளை ஆரம்பித்துள்ளது.

பேக்கரிகள் மற்றும் கடைகளில் நடத்தப்பட்ட சோதனைகளின் போது, நிர்ணயிக்கப்பட்ட எடை மற்றும் விலையை காட்டாத சுமார் 50 பேக்கரிகள் மீது சோதனை நடத்தப்பட்டு, அந்த பேக்கரிகளுக்கு எதிராக வழக்கு தொடரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜே.வி.பியினர் இந்தியா சென்றது நல்ல விடயம்

## கூறுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, பெப். 08

“இந்தியா தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாடு மாறியுள்ளமை நல்ல விடயம்.” - என்று தெரிவித்துள்ளார் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில. இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“இந்தியாவில் இருந்து வந்த அனைத்து பொருட்களையும் ஜே.வி.பியினர் அன்று புறக்கணித்தனர். கொத்தமல்லி விற்பனை செய்தவர்களைக்கூட கொலை செய்தனர். எனவே, ஜே.வி.பியினர் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றத்தை வரவேற்கின்றோம். இந்தியா எமது அயல் நாடு. அந்நாட்டுடன் துப்பாக்கி ஏந்தி பேச்சு நடத்தாமல், பேச்சு மூலம் பிரச்னைகளை தீர்க்க முற்படுவது வரவேற்ககூடிய விடயமாகும்.” - என்றார். (அ)



# இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, பெப். 08

பல்வேறுகோரிக்கைகளை முன்வைத்து இலங்கை மின்சாரசபையின் ஊழியர்கள் நேறறு புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டமானது 62 நபர்களை பணி நீக்கம் செய்தமை, சில அதிகாரிகளை பலவந்தமாக இடமாற்றம் செய்தமை, மின்பட்டியலது விலைகள் அதிகரிக்கப்பட்டமை, சம்பள முரன்பாடு போன்ற கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்பட்டது

மேலும் அரசினால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அரசு அடக்குமுறையை பிரயோகிப்பதை உடன் நிறுத்த வேண்டும் எனும் கோரிக்களும் முன்வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# திருவிழாவுக்கு தயாராகும் கச்சதீவு ஏற்பாட்டு பணிகளில் கடற்படை!

யாழ்ப்பாணம், பெப். 08

கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவை முன்னிட்டு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணிகளில் கடற்படை ஈடுபட்டுள்ளது.

கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முன்னெடுத்து வருகின்றது.

இதேசமயம், திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிகளுக்காக உட்கட்டமைப்பு வசதிகளை கடற்படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் உத்தரவுக்கமைய, வடக்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் காஞ்சன பனாகொடவின் மேற்பார்வையின் கீழ் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.



கச்சதீவு இறங்குதுறைகள் தயார்ப்படுத்தப்படும் அதேநேரம் பக்தர்களுக்கான குடிதண்ணீர் மற்றும் சுகாதார விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், தங்குமிடங்கள், பாதைகள் அமைக்கும் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும் தொடர்ச்சியாக மின்சாரம் கிடைக்கவும் வழியேற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், மருத்துவ குழுக்களை அமைக்கும் பணிகளும் முன்னெடுக்கப்படுவதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கச்சதீவுக்கு குறிகாட்டுவானிலிருந்தும் நெடுந்தீவிலிருந்தும் படகு சேவைகள் நடைபெறவுள்ளன. இந்த ஆண்டும் இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் தலா 4 ஆயிரம் வரையிலான பக்தர்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

# புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலம் வைத்தியசாலைகளுக்கு மின்சாரம்

## ஜப்பானிடமிருந்து 2.8 பில்லியன் ரூபா நிதியுதவி

கொழும்பு, பெப். 08

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பாவனை மூலம் இலங்கை மருத்துவமனைகளில் வலுசக்தி வழங்கலை உறுதிப்படுத்தும் கருத்திட்டத்துக்கான ஜப்பான் உதவவுள்ளது.

ஜயவர்தனபுர பொது மருத்துவமனை, குருநாகல் போதனா மருத்துவமனை மற்றும் இரத்தினபுரி போதனா மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் சூரிய மின்சக்தி உற்பத்தி கட்டமைப்புகளை நிறுவுதல் மூலம் மின்சார வசதிகளை வழங்குவதற்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகம் ஊடாக 1230 மில்லியன் ஜப்பானிய யென் கருத்திட்ட உதவியாக (ஏறத்தாழ 2.8 பில்லியன் ரூபாய்கள்) வழங்குவதற்கு ஜப்பான் அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

சுகாதார துறையில் புதுப்பிக்கத்தக்கப்படாத வலுசக்தி பாவனையைக் குறைத்தல், சுகாதார சேவைகள் பிரிவின் ஒட்டுமொத்த வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் பேண்தகு அபிவிருத்தியை மேம்படுத்துதல் இக்கருத்திட்டத்தின் நோக்கமாக அமைகின்றது.

அதற்கமைய, குறித்த கருத்திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# முன்னாள் கடற்படைத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவு

கொழும்பு, பெப். 08

இலங்கை கடற்படையின் 14 ஆவது கடற்படைத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்ற அட்மிரல் தயா சந்தகிரி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்து அவரது அரசியல் பயணத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

கடல்சார் மற்றும் கடற்படைத் துறையில் அவருக்கு இருக்கும் பரந்த அறிவு மற்றும் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவரை ஐக்கிய மக்கள் சக்தியின் கடல்சார் மற்றும் கடற்படைக் கொள்கைகள் குறித்த ஆலோசகராக நேற்றைய தினம் நியமித்தார்.

மூன்று தசாப்த கால யுத்தத்தில் அவர் ஆற்றிய தாராள பங்களிப்பு காரணமாக 2001 ஆம் ஆண்டு,ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் இலங்கை கடற்படையின் தளபதியாக நியமிக்கப்பட்டார்.53 வருட கால கடற்படை வரலாற்றில் மிகவும் அனுபவம் வாய்ந்த கடற்படை தளபதியாக இவர் வரலாற்றிலும் இடம்பிடித்துள்ளார். (அ)

## நிஷாந்தவின்...

25ஆம் திகதி அதிகாலை கட்டுநாயக்கா அதிவேக வீதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தார். இந்த விபத்தில் அவருடன் பயணித்த மெய்ப்பாதுகாவலரும் உயிரிழந்தார். கொள்கலன் வாகனத்துடனேயே அமைச்சர் பயணித்த ஜீப் வண்டி மோதியதாகக் கூறப்பட்டது.

எனினும், கொள்கலன் சாரதி, அமைச்சரின் வாகன சாரதி ஆகியோரின் சாட்சியத்தின்படி இந்த விபத்தில் மூன்றாவதாக கார் ஒன்றும் சம்பந்தப்பட்டிருந்தது என்றும் தெரிய வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தன்னிச்சை...

காலத்தில் தன்னிச்சையாகச் செயல்பட்டது.

உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளுக்கு இணங்காமல் நிழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தையும் அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. சட்டமூலத்தை நிறைவேற்றும் போது உயர்நீதிமன்றத்தின் 11 பரிந்துரைகள் பின்பற்றப்படவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பரவலாக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடு இந்த முறை எதிர்க்கட்சி எம். பிக்களுக்கு வழங்கப்படவில்லை. அவற்றை ஒதுக்க வேண்டும்.

ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தது திடீரென எடுக்கப்பட்ட முடிவல்ல. இது நன்கு திட்டமிடப்பட்ட முடிவு.

கட்சி தீர்மானத்தை மீறி சபையில் இருந்த பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்விக்கு பதிலளித்த கிரியெல்ல, அவர்களுக்கு உரிமை உள்ளதால் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்றார்.

“நாங்கள் ஒரு ஜனநாயக கட்சி, அவர்கள் தங்கள் சொந்த முடிவை எடுக்க முடியும்,” என்றும் அவர் கூறி னார். (ஐ)

## ஜனாதிபதியின்...

அத்துடன், ஜே. வி. பி. இந்திய எதிர்ப்பு கொள்கையிலிருந்து விடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என்றும் கூறியுள்ளார்.

நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதியின் முழுமையான ஆசீர்வாதத்துடன்தான் இந்தியாவுக்கு அரசு முறை பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள். இவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்குமாறு இந்தியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகருக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம்.

மக்கள் விடுதலை முன்னணியினர் இந்திய எதிர்ப்பு கொள்கையிலிருந்து விடுபட்டு நடைமுறைக்கு ஏற்றால் போல் செயல்பட முனைவது வரவேற்கத்தக்கது. மக்கள் விடுதலை முன்னணியின் மாற்றம் மகிழ்ச்சிக்குரியது - என்றார். (ஐ)

## பதவிக்...

செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மத்திய குழுக் கூட்டத்தின் போது பொதுச் செயலாளர் பதவியை முற்று முழுதாக ச.குகதாசனுக்கு விட்டுக் கொடுப்பதாக கட்சித் தலைவர் சி. சிறீதரனிடம் கூறவில்லை. தலா ஒரு வருடம் அதை பங்கிட்டுக் கொள்வது என்றே சொல்லப்பட்டது முழுமையாக பதவியை ஒப்படைப்பது என்று கூறவில்லை. பதவிக்காலத்தை பகிர்வதற்கு இணங்கியமை உண்மை - என்றார். (ஐ)

## பயஸின்...

பயஸ் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதால் தொடர்ந்தும் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், றொபேர்ட் பயஸ் மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அதனை உடனடியாக நிறைவேற்றுமாறு வலியுறுத்தி கடந்த 31 ஆம் திகதி முதல் உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்து வந்தார்.

சிறப்பு முகாமிலிருந்து தன்னை விடுதலை செய்து விரும்பும் வெளிநாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும், கடவுச்சீட்டு எடுப்பது தொடர்பாக தன்னை இலங்கை துணைத் தூதரகத்துக்கு அழைத்து செல்ல வேண்டும், சிறப்பு முகாமில் தங்களுக்கு மட்டும் தொடரும் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான தனிமை சிறைவாசம் முடிவுக்கு வர வேண்டும் என்பனவே றொபேர்ட் பயஸின் கோரிக்கைகள்.

இந்த நிலையில் சிறப்பு முகாமுக்கு சென்ற வட்டார சிறப்பு துணை ஆட்சியர் மற்றும் துணை காவல் ஆணையர் ஆகியோர் நேரடியாக சிறப்பு முகாமுக்கு சென்று அவருடன் பேச்சு நடத்தினர். இதன்போது, இலங்கை துணைத் தூதகரத்துக்கு அழைத்து செல்வதாக வாக்குறுதி அளித்தனர். இதைத் தொடர்ந்து றொபேர்ட் பயஸ் தற்காலிகமாக தனது உண்ணாவிரதப் போராட்டம் நிறைவுக்கு வந்தது.

## சபாநாயகருக்கு...

என்று பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் செய்தியாளர் களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்நிலை காப்பு சட்டத்தால் நாட்டு மக்களின் பேச்சு உரிமை முடக்கப்பட்டுள்ளது. மறுபுறம் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சபாநாயகரின் செயல்பாடுகள் முறையற்றவை. இவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். சகல எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடி சபாநாயகருக்கு எதிராக வெகு விரைவில் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவோம் - என்றார்.

## மாணவர்...

பொருள் பாவனையில் ஈடுபடுவது தெரிய வந்தது. இந்த சோதனை நடவடிக்கைகளின்போது போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட 517 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 85 கிராம் ஹெரோயின், 48 கிராம் ஐஸ், ஆயிரத்து 561 போதை மாத்திரைகள், ஒரு கிலோவுக்கும் அதிகமான கஞ்சா, 3 கிலோ மாவா, 2 கிலோவுக்கும் அதிகமான மதன மோதக மாத்திரைகள், ஆயிரத்து 285 சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறான சோதனை நடவடிக்கை மூலம் பாடசாலைகளில் இடம்பெற்று வரும் போதைப்பொருள் பாவனை குறைவடைந்துள்ளது. எனினும், 107 பாடசாலைகளில் தொடர்ந்தும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் போதைப்பொருள் பாவனை உள்ளதாக அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு பாடசாலை தொடர்பாகவும் அந்தந்த பாடசாலை ஆசிரியர்கள், மாணவர் தலைவர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினரின் பங்களிப்புடன் 5 ஆயிரத்து 133 குழுக்கள் பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மாணவர்களை தவறான வழியில் இட்டுச் செல்லும் வாய்ப்புகள் அதிகமுள்ளதாகக் கருதப்படும் 434 பாடசாலைகளில் பொலிஸார் கண்காணிப்பை அதிகப்படுத்தியுள்ளனர். (ஐ)

## பொருளாதாரத்தை...

பழைய அரசியல் தீர்வுகளை கூறி பிரசித்தமடைய முயற்சிப்பது கவலைக்குரியது - என்றும் கூறியுள்ளார்.

மேலும், நாட்டை முன்னேற்ற பொது நிலைப்பாட்டுடன் - பொதுவான எண்ணத்துடன் ஒன்றுபட முன்வாருங்கள் என்று தனது கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றைய தினம் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி கொள்கை பிரகடன உரையையும் ஆற்றினார். இந்த உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் பல்வேறு மதங்கள் இனங்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாட்டின் எதிர்காலத்திற்காக அனைவரும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய முக்கியமான தருணம் வந்துள்ளது.

இந்நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு முறையான வருமானம் கிடையாது. பொருத்தமான வீடு இல்லை. இந்த மக்களுக்கு வருமான வழி மற்றும் வீட்டு உரிமை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். நகர்ப்புற, குறைந்த வருமானமுடைய 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு முழுமையான வீட்டு உரிமை வழங்கப்படும்.

இந்த ஆண்டு அஸ்வெசும ஊடாக 24 இலட்சம் பேருக்கு நன்மைகள் அளிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் நாட்டின் கீழ் மட்டத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த முடியும்.

வற் வரி பலருக்கு சுமையாக உள்ளது. இந்தப் பிரச்னையை நாம் உணராமல் இல்லை. அந்தப் பிரச்னைக்கு நாம் படிப்படியாக தீர்வுகளை வழங்கி வருகிறோம். 2022 இல் 4 இலட்சத்து 37 ஆயிரத்து 547 வரிக் கோப்புகள் இருந்தன. 2023 இறுதியில் வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 10 இலட்சத்து 29 ஆக உயர்ந்துள்ளது. இது 130 சதவீத அதிகரிப்பு. வரி வலையமைப்பு விரிவடையும் போது, ஒரு தனிநபருக்கோ அல்லது ஒரு நிறுவனத்துக்கோ ஏற்படும் வரிச்சுமை குறையும்.

மேலும், நமது பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதைத் தொடரும்போது, பொருளாதாரம் ஸ்திரமாகும்போது, வரிச்சுமையைக் குறைப்போம். ‘வற்’ வரியின் சதவீதத்தை திருத்துவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

இன்று எமது பொருளாதாரம் கொழும்பு நகரையும் மேல் மாகாணத்தையும் மையமாகக் கொண்டுள்ளது. நாட்டின் 46 வீதமான பொருளாதாரம் மேல் மாகாணத்திலிருந்தே முன்னெடுக்கப்படுகிறது. இந்நிலை மாற வேண்டும். மேல் மாகாணத்துக்கு வெளியே பொருளாதாரம் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, பிங்கிரிய, அம்பாந்தோட்டை, கண்டி உள்ளிட்ட நகரங்களிலும் எமது பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம். தற்போதும் இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

மேலும், ஒன்பது மாகாணங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசமைப்பில் மாகாண சபை அதிகாரங்களின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்களை உரிய வகையில் வழங்குவோம்.

பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வுகள் இல்லை. பொருளாதார ரீதியான தீர்வே உள்ளது. அறிவியல் தீர்வை தேட வேண்டும். அதனை விடுத்து சில அரசியல் குழுக்கள் பழைய அரசியல் தீர்வுகளை கூறி பிரசித்தமடைய முயற்சிப்பது கவலைக்குரியதாகும்.

அரசியல் அபிலாசைகளை மனத்தில் வைத்துக்கொண்டு, தேர்தலில் பெறும் வாக்குகளை இலக்காகக் கொண்டு, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி அல்லது வீண்கதை பேசி எம்மால் முன்நோக்கி செல்ல முடியாது. மாறாக எதிர்கால சந்ததியின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்ல வேண்டும்.

இந்த மாற்றத்தை குறுகிய காலத்தில் செய்துவிட முடியாது. அதற்காக நீண்ட கால முயற்சியும் அர்ப்பணிப்பும் அவசியப்படும். இதே பாதையில் தொடர்ந்து சென்றால் 2048 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக மாறலாம். எந்த நெருக்கடிக்கும் குறுகிய கால தீர்வுகள் இல்லை. இரண்டு நாட்களில் எந்த இலக்கையும் அடைய முடியாது.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சவாலை ஒற்றுமையுடன் எதிர்கொண்டால் மட்டுமே நமது பயணத்தை துரிதப்படுத்த முடியும். தமக்குக் கிடைக்கும் அந்தஸ்துகள் பற்றி கனவு காணும் சிலர், அந்த நாட்டை விடவும் பதவிகளை அதிகமாக நேசிக்கின்றனர். அந்த பதவிகளுக்காக நாட்டுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றனர். நாட்டையும் மக்களையும் ஏமாற்றுகின்றனர். நடைமுறையை உணராமல் கனவு பாதையில் செல்ல முற்படும்பட்சத்தில் அனர்த்தங்களை எதிர்கொள்ள நேரிடும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (ஐ)

## சுயநிர்ணய...

நால்வரிடம் வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அமெரிக்கா சென்றுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கு, அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களான வில்லி நிக்கேல், டெபோரா றோஸ், ஜமி ரஸ்கின், டானி கே. டேவிஸ் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கை தமிழர்களின் நலனில் அக்கறை கொண்ட அவர்களிடம்,

போர் முடிவடைந்த பிற்பாடு தமிழர்களுக்கு எதிரான செயல்பாடுகள் மிகத்தீவிரமாக அதிகரித்துள்ளது. அந்த வகையில் ராஜபக்ஷ தரப்பு தமிழர்களுக்கு எதிரான செயல்படுகளிலே தீவிரமாக இறங்கியிருந்தும்கூட, இன்று ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்திலே நடைபெறுகின்ற செயல்பாடுகள் ராஜபக்ஷ தரப்பு காலத்திலும் விட மிக மோசமாக நடைபெற்றுள்ளது.

ஜன நாயகத்தை மறுத்து தமிழர்களின் பேச்சு சுதந்திரம் - கருத்து சுதந்திரத்தை அவமதித்து தமிழர்களின் அடிப்படை உரிமைகளாக இருக்கக்கூடிய நினைவுகூரும் உரிமைகளும் நசுக்கப்படுகின்றன. இந்த நிலைமை மேலும் மோசமடைந்து வருகின்றன.

இப்படிப்பட்ட நிலையிலே இலங்கையில் இருக்கக்கூடிய பூகோள போட்டித்தன்மை காரணமாக சீனாவுடன் மேற்கத்தைய நாடுகள் போட்டிபோடுகின்ற நிலைமை உருவாக்கி இருக்கின்ற காரணத்தினாலே தமிழர்களின் விவகாரங்கள் மிக மோசமாக போய்க் கொண்டிருந்தும் கூட அந்த விடயங்களிலே அக்கறை செலுத்தாமல் சீனாவை கட்டுப்படுத்துகின்ற ஓர் அணுகுமுறை கடைப்பிடிக்கின்ற கோணத்தில்தான் மேற்கத்தைய நாடுகள் பொதுவாக செயல்பட்டு கொண்டு வருகின்றன.

அந்த வகையிலே தாங்கள் அனைவரும் தங்களுடைய இந்த அரசாங்கத்துக்கு அழுத்தங்களை வழங்கி விசேடமாக இலங்கை அரசை மாற்றியமைத்து இனப் பிரச்னைக்கு - தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையிலே தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்று கோரினார் எனத் தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu

# மேலும் ஒரு குடும்பம் தமிழகம் சென்றது!



சென்னை, பெப். 08

தொடரும் பொருளாதார நெருக்கடியால் 3 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த மேலும் 5 இலங்கைத் தமிழர்கள் நேற்று அதிகாலை தனுஸ்கோடி முதலாம் மணல் திட்டிற்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள மக்கள் உணவுப் பொருட்கள், அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர். இதனால் கடந்த 2022 ஆண்டு மார்ச் மாதம் முதல் இலங்கையில் இருந்து இலங்கைத் தமிழர்கள் தனுஷ்கோடிக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

இந்நிலையில் வவுனியா மாவட்டம் நெடுங்குழி பகுதியை நந்தகுமார் அவரது மனைவி நித்யா மற்றும் அவரது 3 குழந்தைகள் என ஒரே குடும்பத்தை சேர்ந்த மொத்தமாக 5 பேர் நேற்று முன் தினம் மாலை மன்னாரில் இருந்து ரூ.1.50 இலட்சம் கொடுத்து பைப்பர் படகில் புறப்பட்டு இன்று அதிகாலை ராமேஸ்வரம் அடுத்துள்ள தனுஷ்கோடி அரிச்சல்முனை ஒன்றாம் மணல் திட்டில் கடற்கரையில் வந்திறங்கினர்.

தகவலறிந்த ராமேஸ்வரம் மரைன் பொலிஸார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில் இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டதில் இருந்து அத்தியாவசிய பொருட்களின் விலை சற்று குறைந்த வந்த நிலையில் தற்போது மீண்டும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் குழந்தைகளுடன் இலங்கையில் வாழ வழி இன்றி தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக தெரிவித்தனர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பிறகு 5 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர். பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்திற்கு இலங்கையிலிருந்து சென்ற அகதிகளின் எண்ணிக்கை 293 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்ற அமர்வில் நேற்று பங்கேற்க மறுத்தார் கெஹலிய

கொழும்பு, பெப். 08

பாராளுமன்ற அமர்வில் பங்கேற்க முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மறுத்துள்ளார்.

நேற்று புதன்கிழமை பாராளுமன்ற அமர்வு இடம் பெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்புரை ஆற்றினார். இந்த அமர்வில் பங்கு கொள்ளவே கெஹலிய மறுத்துள்ளார்.

தரமற்ற மருந்து இறக்குமதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

ஆனாலும், சிறை காவலர்களின் பாதுகாப்புடன் கெஹலிய பாராளுமன்றம் செல்ல முடியும். ஆனால், அவ்வாறு பாராளுமன்றம் செல்வதற்கு அவர் மறுத்துள்ளார்.

கெஹலிய ரம்புக்வெல மீது தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெறுகின்றன. தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்ததற்கான ஆவணங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் சிலரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், கெஹலிய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள மறுப்பு வெளியிட்டுள்ளார். (அ)

# இலங்கையின் வளங்களை விற்க அனுமதிக்கமாட்டோம்!

## பெரமுன தொழிற்சங்க தலைவர் திட்டவட்டம்

கொழும்பு, பெப். 08

**இலங்கையிலே எந்தவொரு வளங்களையும் விற்பதற்கு அனுமதிக்க மாட்டோம் என பொது ஜன பெரமுனவின் தொழிற்சங்க தலைவர் அனில் நெத்தி குமார தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் ரெலிகொம் வளங்கள் உட்பட பிரதான வளங்களை விற்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை தபால் தொடர்பு சேவை சங்கத்தில் ஊடக சந்திப்பு இன்று நடைபெற்றுள்ளது.

இதில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க அண்மையில் இந்தியாவுக்கு சென்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்தார்.

இந்த சந்திப்பை மேற்கொள்ள பிரதான காரணம் இலங்கையில் ரெலிகொம் வளங்களை விற்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கூறி பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்ளவே.

இவ்வாறு வளங்களை விற்பது சேவையாளர்களை பாதிப்பதோடு நாட்டின் பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும்.

மேலும் பல வருட சேவை வழங்குநராக உள்ள ரெலிகொம் அமைப்பானது இலங்கை அரசாங்கத்திற்கு பல பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டிக் கொடுத்துள்ளது.

இந்நிலையில், இலங்கை அரசாங்கமானது ரெலிகொம் மாத்திரமல்ல மின்சார சபை, தபால் சேவை, புகையிரத சேவை மற்றும் மில்கோ நிறுவனம் போன்றவற்றையும் விற்பதற்கு முயற்சித்து வருகின்றது, இவற்றிற்கு நாம் இடமளிக்க மாட்டோம்-என்றார். (அ)

# முதன்முறையாக யாழ்ப்பாணம் வந்திறங்கிய ஹரிகரன் குழுவினர்!

யாழ்ப்பாணம், பெப். 08

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள ஹரிகரன் ஸ்டார் நைட் இசை நிகழ்வுக்காக இந்திய பாடகர் ஹரிகரன் உள்ளிட்ட குழுவினர் நேற்று முதன்முறையாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

நேற்று மதியம் 11:30 மணியளவில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை ஹரிகரன் உள்ளிட்ட குழுவினர் வந்தடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நாளை ஹரிகரனின் இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

அந்நிகழ்வில் தென்னிந்திய திரைப்பட பிரபலங்களான நடிகை தமன்னா, ஐஸ்வர்யா ராஜேஷ், யோகி பாபு, சாண்டி மாஸ்டர், புகழ், பாலா உள்ளிட்ட பல கலைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.



நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நடிகை ரம்பா மற்றும் நடன இயக்குநர் கலா மாஸ்டர் ஆகியோர் நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

# கண்புரை சத்திரசிகிச்சை நோயாளர்களை தெரிவு செய்யும் கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், பெப். 08

கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைப் பரிசோதனை செய்து தெரிவு செய்யும் கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் காலை 8.00 மணி தொடக்கம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ் போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண்பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி.ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதி ரணிலுடன் இதுவரை எவ்வித இணக்கப்பாடும் இல்லை

## கூறுகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, பெப். 08

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் வேட்பாளர் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இதுவரை எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் கட்சியுடன் வேறாக கலந்துரையாட வேண்டுமென கோரப்பட்ட போதிலும் ஜனாதிபதி அதற்கான திகதியை இதுவரை பெற்றுத்தரவில்லை என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் பொதுஜன பெரமுன இதுவரையில் தீர்மானிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது கட்சியின் நிபந்தனைகளுக்கு இணங்கி செயற்படும் ஒருவருக்கு ஜனாதிபதி தேர்தலில் ஆதரவளிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக சாகர காரியவசம் இதன்போது தெரிவித்துள்ளார். (அ)

# பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவராக சந்திரிகா குமாரதுங்க

கொழும்பு, பெப். 08

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவ சபையின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் யாப்பு மாற்றம் தொடர்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக சுதந்திரக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் திஸர குணசிங்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி கதிரை சின்னத்தில் பரந்த கூட்டணியுடன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்கவுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் யாப்பு திருத்தத்தின் பிரகாரம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமைத்துவ சபையில் 25 வீத பிரதிநிதித்துவமும் செயற்குழுவில் 50 வீத அதிகாரமும் கிடைக்கும் என சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் புதிய உறுப்பினர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, கட்சியின் பொதுச் செயலாளராக புதிய உறுப்பினரொருவர் தெரிவு செய்யப்படவுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் நியூசிலாந்து அணி அபார வெற்றி!

மவுண்ட் மாங்கானு, பெப். 08

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் நியூசி லாந்து அணி 281 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து - தென்னா பிரிக்க அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி மவுண்ட் மாங்கனுவில் நடைபெற்றது.

நியூசிலாந்து முதல் இன்னிங் ஸில் 511 ஓட்டங்கள் குவித்தது. தென்னாபிரிக்கா முதல் இன்னிங் சில் 162 ஓட்டங்களுடன் சுருண் டது. நியூசிலாந்து 2ஆவது இன் னிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத்து ஆட் டத்தை இடைநிறுத்தியது. இத னால் தென்னாபிரிக்காவுக்கு 529 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

முதல் இன்னிங்ஸில் சதம் அடித்தது போல 2ஆவது இன்னிங் ஸில் நியூசிலாந்தின் முன்னாள் தலைவர் கேன் வில்லியம்சன் சதத்தை (109 ஓட்டங்கள்) பதிவு செய்தார்.

நேற்றைய 4ஆவது நாள் ஆட் டத்தில் தென்னாபிரிக்கா 2ஆவது இன்னிங்ஸை விளையாடியது. 73 ஓட்டங்கள் எடுப்பதற்குள் அந்த அணி 4 விக்கெட்டை இழந்தது.

5ஆவது வரிசையில் ஆடிய டேவிட் பெடிங்ஹாம் மட்டுமே நியூசிலாந்து பந்து வீச்சை தாக்கு பிடித்து ஆடினார். அவர் 87 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவருடன் இணைந்து நிலைத்து நின்ற பீற்றர்சன் 16 ஓட்டங்களில் வெளியேறினார்.

அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க இறுதி யில் தென்னாபிரிக்கா அணி 247 ஓட்டங்களில் சகல விக்கெட்க ளையும் இழந்தது. இதனால் நியூசிலாந்து அணி 281 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையேயான 2ஆவதுது மற்றும் கடைசி டெஸ்ட் வருகிற 13ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ)





# 500 விக்கெட் சாதனை நோக்கி அஸ்வின்

விசாகப்பட்டினம், பெப். 08

டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கெட் சாதனையை அண்மித்துள்ளார் இந்திய கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின்.

விசாகப்பட்டினத்தில் நடந்துமுடிந்த இரண்டாவது டெஸ்டில் இரண்டாவது இன்னிங்ஸில் ஜோ ரூட் விக் கெட்டை வீழ்த்தி, டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 499ஆவது விக்கெட்டை பதிவு செய்தார் அஸ்வின்.

இதன்மூலம் ரவிச்சந்திரன் அஸ்வின் டெஸ்ட் கிரிக் கெட்டில் 500 விக்கெட்கள் வீழ்த்திய பந்து வீச்சாளர் எனும் சாதனையை எட்டும் வாய்ப்பை அண்மித்துள் ளார். அஸ்வின் இதுவரை 97 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 499 விக்கெட்களை சாய்த்துள்ளார். 500 விக்கெட்கள் என்ற மைல்கல்லை அவர் எட்டுவதற்கு இன்னும் ஒரு விக்கெட் மட்டுமே தேவை.

ராஜ்கோட்டில் எதிர்வரும் 15ஆம் திகதி தொடங்கும் இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அஸ்வின் 500 விக்கெட் என்ற சாதனையை படைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

37 வயதான அஸ்வின், கடந்த 2011 முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணிக்காக விளை யாடி வருகிறார். இதுவரை 97 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 499 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார். அதோடு 3,129 ஓட்டங்களை எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 1,000 ஒருநாள் போட்டிகளில் ஆடியது அவுஸ்திரேலியா




கன்பெரா, பெப். 08

அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணி ஆயிரமாவது ஒருநாள் போட்டியில் விளையாடி சாதனை படைத்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த போட்டியே அந்த அணியின் 1000 ஆவது ஒருநாள் போட்டியாகும்.

ஆயிரம் போட்டியில் விளையாடிய 2ஆவது நாடு அவுஸ்திரேலியாவாகும். இந்திய அணி 1055 ஒருநாள் போட்டியில் விளையாடி உள்ளது. பாகிஸ்தான் 970 ஒருநாள் போட்டியில் விளையாடி 3ஆவது இடத்தில் உள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை அணி 912 போட்டிகளில் விளையாடி நான்காவது இடத்தி லுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மன்செஸ்டர் சிற்றி அணிக்கு தொடர்ந்து ஐந்தாவது வெற்றி!

பிரென்ட்போர்ட், பெப். 08

பிறீமியர் லீக் உதைபந்தாட்ட போட்டி இங்கிலாந் தில் நடக்கிறது. இதில், மன்செஸ்டர் சிற்றி 3 - 1 என்ற கோல் கணக்கில் பிரென்ட் போர்ட் அணியை வெற்றி கொண்டது. அந்த அணிக்கு இது தொடர்ந்து 5ஆவது வெற்றியாகும்.

இரு அணிகளுக்கும் இது 22ஆவது போட்டியாக இருக்க மன்செஸ்டர் சிற்றிக்கு இது 15ஆவது வெற்றி யாகவும் பிரென்ட்போர்ட் அணிக்கு 12ஆவது தோல்வியாகவும் அமைந்தது.

போட்டியில் பிரென்ட்போர்ட் அணிக்காக நீல் மௌபே 21ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். தொடர்ந்து அந்த அணியே முன்னிலை வகிக்க, மன் செஸ்டர் சிற்றி வீரர் பில் போடன் அடித்த கோலால் (45,3'), முதல் பாதி ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் நிறைவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் மன்செஸ்டர் சிற்றியே ஆதிக்கம் செலுத்தியது. மீண்டும் பில் போடனே தனது அணிக்காக 53 மற்றும் 70ஆவது நிமிடங்களில் கோல் அடித்தார். எஞ்சிய நேரத்தில் பிரென்ட் போர்ட் அணிக்கு கோல் வாய்ப்பு கிடைக் காமல் பார்த்துக்கொண்ட மன்செஸ்டர் சிட்டி, 3-1 கோல் கணக்கில் வென்றது.

பிரீமியர் லீக் போட்டியில், எதிரணி மண்ணில் நடைபெற்ற 4 ஆட்டங்களிலும் பின்தங்கிய நிலையிலி ருந்து மீண்டு வெற்றியை பதிவு செய்த அணிகள் வரிசையில் மான்செஸ்டர் யுனைடெட்டுடன் தற்போது மான்செஸ்டர் சிட்டியும் இணைந்துள்ளது. (ஐ)





# ஐ. சி. சி. தரவரிசை பும்ரா புதிய சாதனை!

டுபாய், பெப். 08

ஐ. சி. சி. டெஸ்ட் பந்து வீச்சாளர் தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்ப்ரீத் பும்ரா.

இதற்கு முன்பாக பும்ரா ஐ. சி. சி. தரவரிசையில் 3ஆவது இடத்தையே பிடித்திருந்தார். தற்போது அஸ் வினை பின்னுக்கு தள்ளி முதலிடம் பிடித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டி யில் அபாரமாக பந்து வீசி 9 விக்கெட்கள் எடுத்து ஆட்டநாயகன் விருதைப் பெற்றதன் மூலம் முதலி டத்தை அவர் பெற்றார்.

அத்துடன், அதிவேகமாக 150 விக்கெட்களை எடுத்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையையும் படைத்திருந் தார்.

இதேசமயம், இந்திய வேகப் பந்து வீச்சாளர் ஒருவர் டெஸ்ட் போட்டியில் முதலிடம் பிடிப்பது இதுவே முதன்முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் அனைத்து வடிவிலான கிரிக்கெடிலும் முதலிடம் பிடித்து வரலாற்று சாதனையை படைத்துள்ளார். (ஐ)

# என். சண்முகதாசன் - சமரசம் செய்யாத ஒரு கம்யூனிசவாதியின் அரசியல் வாழ்வு

**சமுத்திரன்**



"பல்கலைக்கழகத்தில் எனது இரண்டாவது ஆண்டு ,1939 - 40, எனது முழு வாழ்க்கையினதும் திசையை மாற்றிய அந்த ஆண்டில் நான் ஒரு கம்யூனிஸ்ட் ஆகினேன். அதன் பின்னர் நான் அதனின்று வழுவவேயில்லை."

இந்த வார்த்தைகளுடன் ஆரம்பிக்கிறார் சண்முகதாசன் தனது அரசியல் நினைவுகள் பற்றிய நூலை. அரசியலில் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்த சந்தர்ப்பத்தில் 'Political Memoirs of an Unrepentant Conmmunist ' எனும் தலைப்பில் அவர் ஆங்கிலத்தில் எழுதிய நூல் 1989 ஜூலையில் கொழும்பில் வெளியிடப்பட்டது.

இன்று அந்த நூலையும் அவருடைய மற்றைய அரசியல் எழுத்துக்களையும் வாசிப்பவர்கள் சண்முகதாசனின் அரசியல் வாழ்க்கை இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் வரலாற்றுடன் மிகவும் பின்னிப்பிணைந்திருப்பதை உணருவர். அவர் கொண்டிருந்த சர்வதேச அரசியல் தொடர்புகள் பற்றியும் பல தகவல்களை அந்த நூல் தருகிறது.

பத்தொன்பது வயதுப் பல்கலைக் கழக மாணவனாக சண்முகதாசன் கம்யூனிஸ்டானபோது இலங்கையின் இடதுசாரி இயக்கம் நம்பிக்கை தரும் எழுச்சி மிகுந்த ஆரம்பக்கட்டத்தில் இருந்தது. ஆனால், அவர் 1993 ஆம் ஆண்டு தனது 73 வயதில் மரணிக்கும்போது அவருடைய தலைமையில் உருவான கட்சியும் இயக்கமும் தொடர்ச்சியான பல உடைவுகளுக்கு உள்ளாகிச் சிதறுண்ட நிலையில் இருந்தது போலவே நாட்டின் முழு இடதுசாரி இயக்கமும் சிதறுண்டு செல்வாக்கு இழந்தவண்ணமிருந்தது. அது ஒரு துன்பியல்கரமான நிலைவரம்.

இந்த வரலாற்றுக் காலவெளியில்தான் 'சண்' (Shan) என்று பிரபல்யமடைந்த சண்முகதாசனின் அரசியல் வாழ்வு இடம்பெறுகிறது. அதை முழுமையாக ஆராய்வது எனது நோக்கமில்லை. ஆனால், அது நிச்சயமாக ஆராயப்படவேண்டிய ஒரு வரலாறுதான்.

சண்முகதாசன் மறைந்து 31 ஆண்டுகளாகின்றன என்று நண்பர் தனபாலசிங்கம் நினைவூட்டியபோது அவருடைய நூறாவது பிறந்ததினத்தை முன்னிட்டு 2020 ஆம் ஆண்டில் நான் பங்குபற்றிய இணையவழிக் கலந்துரையாடல் ஒன்று நினைவுக்கு வந்தது. அப்போது நான் பகிர்ந்துகொண்ட கருத்துக்களும் எழுப்பிய கேள்விகளும் அத்துடன் கூடவே மனதுக்கு வந்தன. ஒரு நீண்ட கட்டுரையை எழுதவேண்டும் போலிருக்கிறது. ஆனால் இப்போதைக்கு சில குறிப்புகளை மட்டுமே பதிவிட முடிகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மானிப்பாயில் ஜூலை 3, 1920 பிறந்த நாகலிங்கம் சண்முகதாசன் 1993 பெப்ருவரி 8 ஆம் திகதி பிரித்தானியாவின் பேர்மிங்ஹாம் நகரில் மரணமடைந்தார். நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் அவர் தனது மகளின் குடும்பத்துடன் தங்கியிருந்தார்.

சாதாரண நடுத்தர வர்க்கக் குடும்பத்தில் பிறந்த சண்முகதாசன் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்விகற்று 1938 -39 இல் கொழும்பில் இருந்த பல்கலைக்கழக கல்லூரிக்கு அனுமதிக்கப்படுகிறார். அங்கே அவர் வரலாற்றுத் துறையில் விசேட பட்டப்படிப்பை 1943 ஆம் ஆண்டில் முடித்துக்கொண்டபோது அது இலங்கைப் பல்கலைக்கழகமாக பெயர் மாற்றம் பெற்றிருந்தது.

பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டில் இருந்து சண்முகதாசன் இடதுசாரி அரசியலில் ஈடுபட ஆரம்பிக்கிறார். விசேடமாக பிரித்தானிய காலனித்துவத்துக்கு எதிரான செயற்பாடுகளில் அவர் பங்குபற்றுகிறார். பல்கலைக்கழகத்தின் நூல் நிலையத்தில் மார்க்சிய லெனினிச நூல்களை நிறைய வாசிக்கிறார்.

அந்த நாட்களில் அவருடைய அரசியல் வளர்ச்சி கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்விகற்றுத் திரும்பிய மூன்று இளம் கம்யூனிஸ்டுகளுடன் கிடைத்த உறவினால் துரிதப்படுத்தப்படுகிறது. பீட்டர் கெனமன், பொன். கந்தையா, வைத்திலிங்கம் ஆகியோரே அந்த மூவருமாவர். அவர்கள் இங்கிலாந்தில் மாணவர்களாக இருந்தபோது அந்த நாட்டில் எழுச்சிபெற்றுவந்த பாசிச எதிர்ப்பு மற்றும் சோசலிச அரசியலினால் ஆகர்சிக்கப்பட்டார்கள். பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியில் அவர்கள் இணைந்தார்கள். பல்கலைக்கழகத்தில் சண்முகதாசன் மாணவர் சங்கத் தலைவராக தெரிவுசெய்யப்பட்டு மேலும் பிரபலமானார்.

இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜ கட்சி 1935 ஆண்டில் இருந்து இயங்கிவந்தது. 1939 இறுதி -- 1940 ஆரம்பத்தில் சமசமாஜ கட்சி பிளவடைகிறது. இதன் விளைவாக 1943 ஜூலை 3 இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பிறக்கிறது. ஒரு தற்செயல் நிகழ்வாக அன்றைய தினமே சண்முகதாசனின் பிறந்ததினமாகவும் இருந்தது.

**சண்முகதாசனின் 31ஆவது நினைவு தினம் இன்றாகும். அதை முன்னிட்டு இந்த கட்டுரை பிரசுரமாகிறது**

அதே ஆண்டில் அவர் பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு பரீட்சையை எழுதி முடித்ததும் உடனடியாகவே கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகச் சேர்கிறார். அவர் சேருவதற்கு இரு வாரங்களுக்கு முன்னரே டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்க தலைமையில் கட்சி உருவாக்கப்பட்டது. வைத்திலிங்கம் கட்சியின் கோட்பாட்டாளராகிறார். பீட்டர் கெனமன், கந்தையா, கார்த்திகேசன் மற்றும் பல அறிவாளர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைகிறார்கள்.

கட்சியின் முழுநேர ஊழியராவதற்கு முடிவெடுத்தது பற்றிய சண்முகதாசனின் பதிவு அவருடைய இளமைக்கால இலட்சியக் கனவையும் சோசலிசம் மீதான திடமான நம்பிக்கையையும் அறிந்துகொள்ள உதவுகிறது.

பல்கலைக்கழக இறுதியாண்டுப் பரீட்சைக்கு இரு வாரங்களுக்கு முன்னதாக ஏற்கெனவே பட்டப்படிப்பை முடித்த ஒரு தோழரை சண்முகதாசன் சந்திக்கிறார். பல்கலைக்கழகத்துக்கு பின்னர் என்ன செய்வதாக உத்தசேம் என்று அவர் இவரைக் கேட்கிறார். அதற்கு இவர் அரசியல் வேலை செய்யும் நோக்கம் இருப்பதால் ஒரு ஆசிரியத் தொழிலைச் செய்யப்போவதாகப் பதிலளிக்கிறார்.

அப்போது அந்த தோழர் அப்படியானால் கட்சியின் முழுநேர ஊழியரானால் என்ன என்று கேட்கிறார். வாழ்வாதாரத்துக்கு என்ன செய்வது என்று சண்முகதாசன் கேட்கிறார். வாழ்க்கைச் செலவுக்கு கட்சி மாதம் அறுபது ரூபா வழங்கும் என்கிறார் தோழர். அதையடுத்து அவர் கட்சியின் முழுநேர ஊழியராகும் முடிவை எடுக்கிறார். அந்த முடிவு அவருடைய பெற்றோருக்கு பெரும் அதிருப்தியைக் கொடுக்கிறது.

பொருளாதார ரீதியில் பல்வேறு சிரமங்களுக்கூடாக மகன் பல்கலைக்கழகப் பட்டதாரியாகுவதற்கு உதவிய பெற்றோர் அவர் நிருவாக சேவையில் அல்லது வேறொரு உயர்மட்ட அரச சேவையில் இணைந்து தன்னையும் குடும்பத்தையும் மேனிலைப்படுத்துவார் எனும் எதிர்பார்ப்பினைக் கொண்டிருந்தனர். ஆனால் பட்டதாரி மகனோ அறுபது ரூபா ஊதியத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சேவைசெய்வதற்கு முடிவெடுத்து விட்டார்.

ஏமாற்றமடைந்த தாயார் மகனைப் பார்த்து " உனது பிற்காலத்தில் நீ என்ன செய்வாய், சுகவீனமுற்றால் என்ன செய்வாய்" என்று கேட்கிறார். அதற்கு சண்முகதாசன் "அப்போது நாம் சோசலிசத்தை அடைந்துவிடுவோம். ஆகவே அது பிரச்சினை இல்லை" என்று தன்னம்பிக்கை ததும்ப பதிலளிக்கிறார்.

கம்யூனிஸ் கட்சி உதயமாகி இரு வாரங்கள் மாத்திரமே கடந்த நிலையில் இறுதியாண்டு பரீட்சை எழுதியதும் கட்சியின் சேவையாளனாக மாறிய சண்முகதாசன் அன்று ஆரம்பித்த அந்த நீண்ட அரசியல் வாழ்க்கை கட்சியினதும் இலங்கை இடதுசாரி இயக்கத்தினதும் வரலாற்றுடன் - அதன் எழுச்சியுடனும் வீழ்ச்சியுடனும் - பின்னிப்பிணைகிறது. அதில் சில முக்கிய அம்சங்களை மட்டும் குறிப்பிடவிரும்புகிறேன்.

1943-1963 காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளில் சண்முகதாசன் பங்காற்றியிருக்கிறார். பிரதானமாக இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தை கட்டி வளர்த்ததுடன் திறன்மிக்க தொழிற்சங்க அமைப்பாளராகவும் தலைவராகவும் அவர் தன்னை வளர்த்துக்கொண்டார். அதேபோல் தொழிலாளர்களுக்கும் இளம் சந்ததியினருக்கும் கோட்பாட்டு ரீதியான அரசியல் அறிவூட்டும் செயல்பாடுகளிலும் முக்கிய பங்காற்றினார். 1947 பொது வேலைநிறுத்தம், 1953 ஹர்த்தால் உட்பட பல்வேறு தொழிலாளர் போராட்டங்களில் அவர் தலைமைத்துவப் பங்காற்றிய தொழிற்சங்க அமைப்பு ஒரு முக்கிய சக்தியாக விளங்கியது.

1963 ஆம் ஆண்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் சார்பு என்றும் சீனச்சார்பு என்று இரண்டாக பிரிகிறது. நீண்டகாலம் அதிகாரத்தில் இருந்து மறைந்த ஜோசப் ஸ்டாலினுக்கு எதிராக அவருக்கு பின் வந்த குருஷேவ் 1956 ஆம் ஆண்டு முன்வைத்த "தனிநபர் வழிபாடு " விமர்சனத்தை தொடர்ந்து உலக கம்யூனிஸ்ட் கட்சிகளில் இடம்பெற்ற உட்கட்சி விவாதங்கள் 1963 ஆம் ஆண்டில் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் பகிரங்கமான பிளவாக உருவெடுத்தன.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குள் சீனச்சார்பு நிலைப்பாட்டை எடுத்து போராடிய சண்முகதாசன் கட்சியில் இருந்து வெளியேற்றப்படுகிறார். அதைத் தொடர்ந்து கட்சி இரண்டாகப் பிளவடைகிறது. விக்கிரமசிங்க, கெனமன், வைத்திலிங்கம் மற்றும் ஆரம்பகாலத் தலைவர்கள் சோவியத் சார்புக் கட்சியின் முக்கிய தூண்களாகிறார்கள். சண்முகதாசன் தலைமையில் மார்க்சிய - லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி உருவாகிறது. பாராளுமன்றப் பாதையூடாக சோசலிசம் எனும் கருத்தியலை நிராகரித்து மாவோயிச புரட்சிகரக் கட்சியாக அது அறியப்படுகிறது.

பிளவின்போது கட்சியின் தொழிற்சங்க சம்மேளனத்தின் பெரும் பகுதி சண்முகதாசனைப் பின்பற்றி புரட்சிகர அணியுடன் இணைகிறது. புதிய ஜனநாயகப் புரட்சி மற்றும் சோசலிசப் புரட்சி பற்றிய கதையாடல்கள் மீளுயிர் பெறுகின்றன. சண்முகதாசன் தீவிரமாகச் செயற்படுகிறார். வேறு பல வேலைகளுக்கு மத்தியிலும் அரசியல் வகுப்புகளையும் நடத்துகிறார்.

1960 களில் கட்சி மேற்கொண்ட பல முன்னெடுப்புகளில் இரண்டு பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஒன்று, மலையகத் தோட்டத் தொழிலாளர்களை அணிதிரட்டி அரசியல்மயப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்த செங்கொடிச் சங்கத்தின் செயற்பாடுகள். மற்றையது, யாழ்ப்பாணத்தில் தீண்டாமைக்கு எதிராக நடத்தப்பட்ட அணிதிரட்டலும் போராட்டமும்.

இவை சந்தர்ப்பவாத பாராளுமன்ற தேர்தல் அரசியலின் ஆதிக்கத்திற் குள்ளாகிவிட்ட இலங்கையின் இடதுசாரி அரசியலுக்கு மாற்றாக ஒரு அணிதிரட்டல் போராட்ட மரபை மீளக் கண்டுபிடிக்கும் நம்பிக்கை தரும் முன்னெடுப்புகளாக அமைந்தன. ஆனால் குறுகிய காலத்தில் கட்சிக்குள் பிரச்சினைகள் வலுவடைவதற்கான அறிகுறிகள் பகிரங்கமாகின.

ஒன்றுக்குப் பின் ஒன்றாக பிளவுகள் இடம்பெற்றன. புதிய கட்சிகளும் குழுக்களும் தோன்றின. இவற்றிடமிருந்து சண்முகதாசனின் தலைமை பற்றிய விமர்சனங்கள் வெளிவந்தன. இந்த பிளவுகள் சில பற்றி அவர் தனது கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளார். ஆனால், உண்மை என்னவெனில் அவர் தலைமை தாங்கிய கட்சி தொடர்ந்து பலவீனமடைந்தது.

1990 களின் முற்பகுதியில் சண்முகதாசனின் நூல் பற்றி நான் எழுதிய விமர்சனத்தை லண்டனில் இருந்து வெளிவரும் 'Race and Class ' சஞ்சிகை பிரசுரித்தது. அதில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை மற்றும் தமிழ் மக்களின் போராட்டம் தொடர்பாக அவர் பற்றிய எனது விமர்சனத்தை முன்வைத்திருந்தேன். தமிழ் விடுதலைப் போராட்டம் பற்றி அவர் எழுதிய விமர்சனம் சரியானதே. ஆனால் அவருடைய கட்சி ஏன் போராடத் தவறியது என்ற கேள்வியை நான் எழுப்பியிருந்தேன்.

1976 ஆம் ஆண்டில் மாவோவின் மரணத்துக்கு பிறகு சீனாவில் ஏற்பட்ட கொள்கை மாற்றங்கள் சண்முகதாசனுக்கும் சீனக்கட்சிக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவிய உறவின் முடிவுக்கு காரணமாயின. ஆயினும், அவர் மாவோயிசத்தின் மீதான நம்பிக்கையில்

(16ஆம் பக்கம் பார்க்க)

# மக்களிடம் இருந்து அந்நியப்படும் அரசாங்கம்






**கலாநிதி ஜெகான் பெரேரா**

**எதிர்ப்பை ஒடுக்குவதற்காக அரசாங்கம் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அரச அமைப்புக்களுக்கு இருக்கும் அதிகாரங்களை படிப்படியாக அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. உருவாகிவரும் பெரும் எதிர்ப்பு அலையில் இருந்து தன்னைப் பாதுகாக்க அரசாங்கம் தயாராகிவருகிறது.**

இலங்கையின் சுதந்திர தினத்துக்கு முதல் நாள் கொழும்பு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நூல் வெளியிட்டு வைபவம் ஒன்று இடம்பெற்றது. கடந்த நூற்றாண்டில் இலங்கையின் பொதுவாழ்வுக்கு பங்களிப்புச் செய்த ஒரு தந்தையினதும் மகனினதும் சரிகைள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

தந்தையார். ( பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் அரசாங்க சபை என்று அறியப்பட்ட ) பாராளுமன்றத்தின் ஒரு முன்னாள் சபாநாயகர் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி. மகன் வெளிநாடுகள் பலவற்றில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி தூதுவராக பணியாற்றி பிறகு உள்நாட்டுப்போர்க் காலத்தில் ஒரு கட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராகவும் பணியாற்றிய யோகேந்திரா துரைசுவாமி.

யோகேந்திராவை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். அவர் எனது நல்ல நண்பர். தமிழ் மக்களினதும் பொதுவில் நாட்டு மக்களினதும் நலன்களைப் பாதுகாப்பதற்கு அகிம்சை வழியும் விட்டுக்கொடுப்புமே சிறந்த வழி என்பதில் அவர் உறுதியான நம்பிக்கை கொண்டவர்.

நூல் வெளியீட்டு வைபவத்தில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் முதிய ஒரு தலைமுறையைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். அவர்கள் 'கிழக்கின் சுவிட்சர்லாந்தாக" மாறக்கூடிய ஆற்றலைக் கொண்டதாக இலங்கையைக் கண்ட பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியபோது சுதந்திரத்தின் ஆரம்பகால எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகளின் அனுபவத்தைக் கொண்டவர்கள். அடுத்து வந்த தசாப்தங்களில் அந்த நம்பிக்கைகள் படிப்படியாக இல்லாமற்போய் முதலில் தெற்கையும் பிறகு வடக்கையும் வன்முறை ஆக்கிரமித்த காலப்பகுதியையும் அவர்கள் கடந்து வந்தார்கள்.

வைபவத்தின் இசையும் அலங்காரமும் தமிழ் கலாசாரப் பாரம்பரியத்தில் அமைந்திருந்தாலும் பிரிவினை அல்லது பிளவு உணர்வு எதுவும் இல்லை. தமிழிலும் சிங்களத்திலும் உரைகள் நிகழ்த்தப்பட்டன. இத்தகைய ஒரு அரசியல் சமுதாயம் போருக்கு போகிற அளவுக்கு பிளவுண்டதை கற்பனை செய்துபார்ப்பதே கஷ்டமாக இருந்தது.

வைபவத்தில் ஒட்டுமொத்த உணர்வு ஐக்கியத்தையும் தோழமையுணர்வையும் பிரதிபலிப்பதாக இருந்தது. அந்த உணர்வுகளை அடையாளப்படுத்துவதாக வைபவத்தின் இறுதியில் இசைக்கப்பட்ட தேசியகீதம் அமைந்தது.

சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியின் சரிதை வேறுபட்ட ஒரு காலத்தையும் வேறுபட்ட ஒரு இலங்கையையும் எடுத்துக்காட்டியது. 1911 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் காலனித்துவ சட்டசபைக்கு தனியொரு பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்கான உரிமையை நாட்டு மக்களுக்கு வழங்கினார்கள்.

முதல் தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சேர் மார்க்கஸ் பெர்னாண்டோவை சேர் பொன்னம்பலம் இராமநாதன் தோற்கடித்தார். சுமார் மூன்று தசாப்தங்களுக்கு பிறகு சபாநாயகர் தெரிவில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சிங்களவரான சேர் சிறில் டி சொய்சா கே.சி.யை தோற்கடித்து அதே சரித்திரம் திரும்ப நிகழ்வதை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி உறுதிசெய்தார். இரு சந்தர்ப்பங்களிலுமே வாக்களித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் சிங்களவர்கள். ஆனால் அவர்கள் தமிழர்களுக்கு வாக்களித்தார்கள். (சொய்சா பிறகு ஒரு கட்டத்தில் செனட் சபையின் தலைவரானார்.)

**சுருங்கிப்போன அரசியல் சமுதாயம்**

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற 76 வருட நிறைவை எமது கடந்த காலத்தின் சிறப்புகளை மீளிணைக்க இயலாத முறையிலேயே அரசாங்கம் கொண்டாடியது.

நாடெங்கும் தேசியக்கொடிகள் பெருமளவில் பறக்கவிடப்பட்டு தேசிய உணர்ச்சியோ அல்லது தேசபக்தி யையோ பரந்தளவில் வெளிக் காட்டப்படவில்லை. தவறான ஆட்சிமுறை மற்றும் விரயம் காரணமாக மூண்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாக சுதந்திரதின அணிவகுப்பையும் கூட மட்டுப்படுத்த வேண்டியிருந்தது.

ஒரு பக்கத்தில் முக்கிய பிரமுகர்கள் அமர்ந்திருந்தார்கள். மற்றப்பக்கத்தில் கடற்கரை வரை காலிமுகத்திடல் பசுந்தரை நீண்டுவிரிந்து கிடந்தது. மக்களைக் காணமுடியவில்லை. கலந்துகொள்வதை அவர்கள் தவிர்த்தார்கள். தங்களின் குடும்பங்கள் பட்டினியில் உழலுகின்ற ஒர நேரத்தில் காலிமுகத்திடலுக்கு வந்தால் அரசாங்கம் நடத்திய அணிவகுப்பைக் கண்டு எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டிவரலாம் என்று மக்கள் சுதந்திரதின நிகழ்வில் கலந்துகொள்ளாமல் இருந்திருக்கலாம்.

அதன் விளைவாக, நாட்டின் கலாசாரத்தை வெளிப்படுத்தும் கலை நிகழ்ச்சிகளையும் இசையையும் நடனங்களையும் சுதந்திரதின கொண்டாட்டங்களில் காணமுடியவில்லை. அதற்கு பதிலாக இராணுவப் பிரிவுகளின் நிகழ்ச்சிகளையே காணக்கூடியதாக இருந்தது. பெரும்பான்மைக் கலாசாரத்தின் ஒரு அடையாளமாக பொன்னிறத்திலான சிங்க ஊர்தி வீதியில் இழுத்துவரப்பட்டது. நாட்டின் பல்வகைமையின் மூலைக்கல்லான அரசியல் சமுதாயத்தின் வளத்தையும் காணக்கூடியதாக இருக்கவில்லை.

இன, மத சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகள் உட்பட நாட்டின் எதிரணி அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சுதந்திரதின கொண்டாட்டங்களில் பங்கேற்கவில்லை. அரசாங்கம் பெருமளவுக்கு தனிமைப்படுத்தப்பட்டு வருவதை சுதந்திரதின நிகழ்வு அம்பலப்படுத்தியது. அரசாங்கத்தின் பலத்தை வெளிப்படுத்துவதாக பாதுகாப்பு படைகள் மீது அது கொண்டிருக்கும் கட்டுப்பாடு மாத்திரமே விளங்குகிறது.

அன்றைய தினம் பெருமளவு சலுகைகளையும் பயன்களையும் படையினரே பெற்றனர். இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 211 அதிகாரிகளுக்கான பதவியுயர்வுகளையும் இராணுவத்தின் ஏனைய தரங்களைச் சேர்ந்த 1,239 பேருக்கான பதவியுயர்வுகளுக்கும் ஜனாதிபதி அங்கீகாரத்தை வழங்கினார். இவ்வாறு செய்வது சுதந்திரதினங்களின்போது வழமையாகும். கடந்த வருடம் 75 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இராணுவத்தின் 208 அதிகாரிகளுக்கும் ஏனைய தரங்களைச் சேர்ந்த 7,790 பேருக்கும் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன.

எதிர்ப்பை ஒடுக்குவதற்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளுக்கு இருக்கும் அதிகாரங்களைப் படிப்படியாக திட்டமிட்டமுறையில் அரசாங்கம் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. "தடை செய்யப்பட்ட" உள்ளடக்கங்களை மதிப்பிடுவதற்கும் நீக்குவதற்குமான பரந்தளவு அதிகாரங்களை இணையவெளி பாதுகாப்பு சட்டம் கொண்டிருக்கிறது.

இந்த சட்டம் 'இலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள் பற்றிய தவறான அறிக்கைகளை" யும் " மத உணர்வுகளைப் புண்படுத்தும் வெளிப்படையான நோக்கத்துடனான அறிக்கைகளை"யும் உட்பட பல்வேறு விடயங்களை தடுப்பதற்கு பரந்தளவில் அதிகாரத்தைக் கொண்டதாக இந்த சட்டம் அமைந்திருக்கிறது. தடைசெய்யப்பட்டவை என்று சட்டம் கூறுகின்ற விடயங்களை அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுவே வியாக்கியானம் செய்யும்.

அடுத்து அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்திருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஒலிபரப்பு அதிகாரசபைச் சட்டம் மற்றும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் சட்டம் ஆகியவை தொழிற்சங்க நடவடிக்கைகளும் அரசியல் அபிப்பிராயங்களும் நாட்டின் இறைமைக்கும் சட்டம் ஒழுங்கிற்கும் குந்தகம் விளைவிக்கும் நோக்கத்தைக் கொண்டவையா இல்லையா என்பதையும் தண்டனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தக்கூடியவையா இல்லையா என்பதையும் அரசாங்கத்தினால் நியமிக்கப்படுபவர்களுக்கு வழங்கும்.

**புதிய அன்னியமயமாதல்**

தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கிலும் கிழக்கிலும் மீண்டும் கறுப்புக்கொடிப் போராட்டங்கள் தீவிரமடையத் தொடங்கியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இது நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னரான முதலாவது தசாப்தம் முதல் தீவிரமடையத் தொடங்கிய இனநெருக்கடியின் பொதுவான ஒரு போக்காக இருந்து வந்திருக்கிறது.

சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி, சேர் பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தமிழர்களின் பிரதிநிதிகள் சிங்கள பெரும்பான்மையினரின் ஆதரவுடன் முழு அரசியல் சமுதாயத்தையும் பிரதிநிதித்துவம் செய்த ஒரு காலம் இருந்தது. அந்த தமிழ் மக்கள் இப்போது அன்னியப்படுத்தப்பட்டுவிட்டார்கள்.

சதந்திரத்துக்கு பிறகு சனத்தொகையின் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் ஜனநாயக ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டதையடுத்து தமிழர்கள் அதிகாரமிழந்த சிறுபான்மைச் சமூகமாகிப் போனார்கள். இது அவர்கள் சுதந்திரத்தைக் கொண்டாடக்கூடிய ஒரு நிரைவரம் அல்ல. அவர்களைப் போன்றே இப்போது சிங்களவர்களும் ஏனைய சமூகத்தவர்களும் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

சுமார் இரு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதியாக வந்தபோது ரணில் விக்கிரமசிங்க வழங்கிய உறுதிமொழியைக் காப்பாற்றத் தவறியமை பெரும் ஏமாற்றம் தருவதாகும்.

நாட்டின் 75 வது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதாக அவர் உறுதியளித்தார். இப்போது 76 வது சுதந்திரதினமும் கொண்டாடப்பட்டுவிட்டது. ஆனால் மாகாணங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவு அதிகாரங்களை பரவலாக்கும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தைக் கூட நடைமுறப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருவதாக இல்லை.

இவ்வாறாக உறுதிமொழியைக் காப்பாற்ற அரசாங்கம் தவறியதனால் இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் மாத்திரம் தான் ஏமாற்றமடைந்திருக்கின்றன என்றில்லை. எதிரணி அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், ஐக்கிய நாடுகள் அமைப்புகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோள்களை பொருட்படுத்தாமல் இணையவெளி பாதுகாப்பு சட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய முறை ஜனநாயகம் மீதான அரசாங்கத்தின் கடப்பாட்டையும் பற்றுறுதியையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

இணையவெளி பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்றிய பிறகு பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தையும் பிடிவாதமாக நிறைவேற்றுவதில் அரசாங்கம் கொண்டிருக்கும் நாட்டம் அரசாங்கம் அதன் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத ஏனைய சகல துறைகளுக்குமான ஜனநாயக வெளியை மூடிவிடும் நோக்கத்தைக் கொண்டதாகும். அதன் விளைவாக அரசாங்கத்துடன் திறந்த அரசாங்க பங்காண்மையில் பங்கேற்ற சிவில் சமூக அமைப்புகள் அந்த செயன்முறையில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்திருக்கின்றன.

இதே போன்ற விசனம் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் பதிவு மற்றும் மேற்பார்வை சட்டமூலத்தின் விடயத்திலும் இருக்கிறது.

'மிக முக்கியமான கலாசார விழுமியங்களையும்" 'பொது ஒழுங்கின் பாதுகாப்பையும் நலன்களையும்" பாதிப்பதாகக் கருதப்படக்கூடிய எந்தவொரு நடவடிக்கையும் தனிப்பட்ட அரசாங்க சார்பற்ற அமைப்புக்களை இடைநிறுத்துவதற்கும் மூடுவதற்கும் வகைசெய்யக் கூடியதாக அந்த சட்டமூலத்தின் வரைவு அமைந்திருக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளில் பெரிய எதிர்ப்பு அலை உருவாகி வருகிறது. அதற்கு எதிராக தன்னைப் பாதுகாக்க அரசாங்கம் தயாராகிறது. ●

# 4 கிலோ திமிங்கல அம்பருடன் மூன்று பேர் நேற்று கைதாகினர்!

கொழும்பு, பெப். 08

மிதக்கும் தங்கம் என அழைக்கப்படும் திமிங்கில அம்பர் சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்ய தயாரான சந்தேகநபர்கள் மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

4 கிலோ 500 கிராம் அம் பர் மீட்கப்பட்டது. இலங் கையில் அம்பர் வைத்திருப் பதோ, விற்பனை செய்வதோ சட்டவிரோதமானது. இரா ணுவ புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவலுக்கு அமைய, தெவிநுவர மற்றும் நகுலகமுவ பிரதேசத்தில் வைத்து மிரிஸ்ஸ குற்றத் தடுப்பு பிரிவினரால் இவர் கள் கைது செய்யப்பட்டுள்ள னர்.

மொண்டேரோ ரக ஜீப் வண்டியில் பயணித்த போதே கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நகுலோகமுவ பிரதேசத்தை வசிப்பிடமாக வும், 25-30 வயதுக்கு இடைப் பட்டவர்களாவர்.

அழிவு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள திமிங் கலத்தின் உடலில் இருந்து இயற்கையாக வெளியாகும் விந்து மற்றும் சத்தியான இந்த அம்பரின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.3 கோடி ரூபாயாகும்.

வாசனைத் திரவியங்கள் மத்தியில் இவை அதிக கிராக்கி உள்ளதாகவும், வாச னைத் திரவியங்களின் நறு மணத்தை நீண்ட காலம் பரா மரிக்கப் பயன்படுவதாகவும் கூறப்படுகிறது.

(ஐ)

# கொள்ளையில் ஈடுபட்ட பெண் உட்பட மூவர் கைது!

கொகழும்பு, பெப். 08

வீடொன்றிற்குள் நுழைந்து நபரொருவரை தாக்கி நகைகளை கொள்ளையிட்டு சென்ற சம்ப வம் தொடர்பில் பெண் உட் பட மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஹங்வெல்ல பிரதேசத்தை சேர்ந்த 24 மற்றும் 27 வயது டைய இரு நபர்களும் 43 வயது டைய பெண் ஒருவருமாவர்.

ஜனவரி மாதம் 31 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத் தில் 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளை சம்பவம் தொடர்பில் மீகொடை பொலி ஸாருக்கு கிடைத்த முறைப் பாட்டின் அடிப்படையில் குற் றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண் டனர்.

இதனையடுத்து மேற்கொள் ளப்பட்ட விசாரணையில் இரு சந்தேக நபர்களும் மீகொடை பிரதேசத்தில் வைத்து பெண் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து கொள்ளையிடப்பட்ட நகைக ளும் கொள்ளையிடச் செல்ல பயன்படுத்திய மோட்டார் சைக் கிள் மற்றும் 2 கைத்தொலைபே சிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகத்தில் கைது செய்யப் பட்ட பெண்ணின் தலைமை யில் இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசார ணையில் மேலும் தெரியவந் துள்ளது.

(அ)

# இரண்டு பிள்ளைகள் மீது தாக்குதல் நடத்தி வலைதளங்களில் பகிர்ந்த தந்தை கைது!

கொழும்பு, பெப். 08

ஹற்றன் - திம்புள்ள - பத் தனை பகுதியைச் சேர்ந்த தந்தை ஒருவர் தமது இரண்டு பிள்ளைகள் மீது தாக்குதல் நடத்தி அதனை ஒளிப்பதிவு செய்து சமூக வலைத்தளங்க ளில் பகிர்ந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமது தாய் தொழிலுக்காக வெளிநாடு சென்றுள்ள நிலை யில் குறித்த சிறுவர்கள் பத்தனை பகுதியில் உள்ள தமது பாட்ட னாரின் பராமரிப்பில் இருந்துள் ளனர்.

இதன்போது, கடந்த 5 ஆம் திகதி குறித்த சிறுவர்களின் தந்தை, அவர்களை தாக்கியது டன், அதனை ஒளிப்பதிவு செய்து, குறித்த காணொளியை சமூகவலைத்தளங்களில் பதி வேற்றியுள்ளதாக தெரிவிக்கப்ப டுகிறது.

இது தொடர்பாக காவல்து றையினர் முன்னெடுத்த விசார ணைகளையடுத்து, லிந்துலை, நாகசேனை பகுதியில் வைத்து குறித்த நபர் கைது செய்யப் பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளுக்காக அவர் திம்புள்ள - பத்தன காவல் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட இரண்டு சிறுவர்களும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதான சந்தேக நபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவ டிக்கை எடுத்துள்ளதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# என். சண்முகதாசன்....

இருந்து வழுவவில்லை. 1980 களில் சர்வதேச மாவோயிச அமைப்புகளின் ஒருங்கி ணைப்பு நிகழ்வுகளில் அவர் முக்கிய பங்கு வகித்தார். அந்த அமைப் புகள் அவரை ஒரு தலைவராக மதித்தன. ஆனால், இலங்கையில் தனது கட்சியின் தேய்வை அவரால் தடுக்க முடியவில்லை.

பல காலமாக உலகின் பல்வேறு மட்டங்களில் மார்க்சியவாதிகள் மத்தியில் இருபதாம் நூற்றாண்டின் சோசலிசம் மற்றும் அதை அடைவ தற்காக நடத்தப்பட்ட போராட்டங்கள் பற்றிய விமர்சனங்களும் மீள்மதிப்பீடு களும் இடம் பெற்றுவருகின்றன. இரு பத்தியோராம் நூற்றாண்டில் ஜன நாயகம், சோசலிசம், கம்யூனிசம் பற்றிய மீள்கற்பிதங் களை நோக்காகக் கொண்டே இந்த முயற்சிகள் முன்னெடுக் கப்படுகின்றன.

இந்த விமர்சனப் பார்வை யில் இலங்கையின் இடதுசாரி இயக்கம் மதிப்பீடு செய்யப் படும்போது சண்முக தாசனின் வகிபாகமும் மீள்மதிப்பீட்டுக்கு உள்ளாகும். அவருடைய பங்களிப்புகள் பற்றிய பல கேள்விகளும் விமர்சனங் களும் எழுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால், தவிர்க்கமுடியாத ஒரு முடிவை முன்கூட்டியே சொல்லிவிடலாம். அதா வது சண்முகதாசன் இறுதிவரை சமரசம் செய்யாத ஒரு கம் யூனிசவாதியாக இருந்தார்.



